உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | ஆனந்த – பங்குனி – 10—4—75 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## வசந்தமே வருக !

**நம்பிக்கை வேண்டும் :**

காலம் என்ற ஒன்றை ஆண்டு, திங்கள், வாரம், நாள், நாழிகை, விஞடி என்று பல கூறுகளாக்கி வழங்குகின்றோம். விரைகின்ற காலத்தின் இடையே வாழ்வு ஓடிக் கழிகின்றது. வரையறுக்கப் பட்ட வாழ்நாளில் ஒவ்வொருவரும் பல்வேறு ஆண்டுகளைச் சந்திக்கின்றோம். ஆண்டுகள் ஒவ்வொன்றும் கழிகின்றபோது எதிர் காலத்தில் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கை மேலும் வலுவாகின்றது. நடந்து கொண்டிருக்கும் காலத்தில் உள்ள துன்பங்கள் எல்லாம் வரப்போகும் காலத்தில் கதிரவனைக் கண்டபனி போல மறைந்துவிடும் என்ற நம்பிக்கை மனத்தில் வேர் ஊன்ற வாழ்வைத் தொடர்கின்றோம்.

வசந்தத்தின் வாய்ப்பு :

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் எனப் பெரும்பொழுது ஆறுவகையாக இயங்குகின்றது. மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு எனச் சிறுபொழுதும் ஆறுவகையாக அமைகின்றது. இயற்கையின் தட்ப வெப்ப நிலைகள் காலந்தோறும் வேறுபடுகின்றன. ஓராண்டில் கார்கால முதலாக வேனிற்காலம் ஈருக இரண்டிரண்டு திங்கள் ஒவ்வொரு காலமாக நம் நூல்களுள் உரைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காலமும் ஒவ்வொரு வகையில் சிறப்புற அமைவனவே. இவற்றுள்ளும் வசந்தகாலம் எனப்படும் இளவேனிற் காலம் மந்தமாருதம் வீசி மக்களை மகிழ்விக்கும் இனிய காலமாய் நம் தமிழகத்தில் விளங்குவதை நம் அனுபவத்திற் காண்கிறோம்.

வசந்தகால நினைவு :

இளவேனிற் காலம் எனப்படும் வசந்த காலத்தின் வருகையை எல்லோரும் எதிர்நோக்குகின்றோம். இந்தக் காலத்தில் தென்றல் வீசுகின்றது; மரங்கள் தளிர்க்கின்றன. கோயில்களில் விழாக்கள் தொடங்குகின்றன. வந்துவிட்ட வசந்த காலத்தை நாமும் வரவேற்பதுடன், நம் சமயாசாரியப் பெருமக்களின் வாழ்வு இந்தக்காலத்துடன் கொண்ட இணைப்பை நம்மையறியாமல் நம் சிந்தை நினைத்து மகிழ்கின்றது.

நம்பியாரூரர் திருவுள்ளத்தில் :

தொண்டைநாட்டுத் திருவொற்றியூரில் சங்கிலியாரை இறைவன் திருவருளால் மணந்து இன்புற்றுச் சுந்தரர் வாழ்கின்ற காலம். பருவங்கள் ஓடி மறைகின்றன. வசந்தகாலம் வருகின்றது. அந்த வசந்த காலத்துடன் பூந்தென்றலும் வருகின்றது; அதுவோ பொதிய மலையிலிருந்து சந்தன மணத்துடன் கலந்துவரும் இனிய தென்றல். மந்தமாருதம் என்ற பெயருக்குரிய இனிய காற்று. திருவாரூரில் வசந்தத் திருவிழா சிறப்புடன் கொண்டாடப் பட்ட நேரத்தில், தியாகேசப் பெருமானை அகம் கலந்து வழிபட்டு இன்புற்ற நம்பியாரூரர்க்கு, திருவொற்றியூரில் அந்த நினைவு வருகிறது. இதனைச் சேக்கிழார் எடுத்துரைக்கும் அழகிய திருப்பாட்டு வருமாறு :-

"பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூர் அணிவீதி யழகரவர்
மங்கலநாள் வசந்தமெதிர் கொண்டருளும் வகைநினைந்தார்"

(ஏயர்கோன். 270)

"வெண்மதியின் கொழுந்தணிந்த வீதி விடங்கப் பெருமான்," திருவோலக்கம் கொண்டருளும் திருக்காட்சி நம்பியாரூரர் நினைவில் தோன்றியதாம்; பண் போன்ற மொழி உடைய பரவையார் பாடலும் ஆடலும் கண் முன்பு காண்பது போலவும், செவிகளிற் கேட்பது போலவும் இனிய நினைவுகள் நம்பியாரூரர் திருவுள்ளத்து எழுந்தன:

"வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங்கப் பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த ஒலக்க மதனிடையே
பண்ணமரு மொழிப்பரவை யார்பாடல் ஆடல்தனைக்
கண்ணுறமுன் கண்டு கேட்டார்போலக் கருதினர்"

(ஏயர்கோன் - 271)

இளவேனிற் காலத்திருவிழா நினைவும், வீதிவிடங்கப் பெருமான் நினைவும் எழவே, "பத்திமையும்" என்னும் இசைத் திருப்பதிகம் எடுத்து இயம்பினர் நம்பியாரூரர். "எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே" என்று உருகிற்று சுந்தரர் திருவுள்ளம். அத்திருவுள்ளத்தில் திருவாரூர்ப் பெருமான் மீது வைத்த பக்தியை இப்பதிகம் இனிது எடுத்துக் காட்டுகின்றது.

சூள் பொய்த்த விளைவு :

"பூங்கோயில் அமர்ந்தாரைப் புற்றிடங் கொண்டிருந்தாரை, ஈங்கு நான் மறந்தேன் என்று ஏசறவால் மிக அழிவார்" என்று இதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார் சேக்கிழார் பெருமான். திருவொற்றியூர்ப் பெருமான் முன்னர்ச் செய்த சபதத்தையும் மறக்குமளவிற்குத் தியாகேசர் நினைவு உறுதி கொண்டெழுந்தது என்பதனை உணருங்கால், அந்த பக்தியின் ஆழத்தை நன்கு அறிய முடிகின்றது. கண்ணொளி மறைந்து மூர்ச்சித்ததும், செய்வதனை அறியாது திகைத்தார்.

## உண்மை யாது ?

தம்பிரான் தோழர் நெடிதுயிர்த்தார். "சூளுறவு மறுத்ததனால் இவ்வினை வந்து எய்தியதாம்" என்று நினைக்கின்ற ஆரூரர், அத்துயர் நீங்கவும் அவனருளையே வேண்டத் தொடங்குகின்றார். இவ்விடத்து நம்மனோர் உணர வேண்டிய ஒரு பேருண்மை உள்ளது. 'துன்பங்களை வினை வழியே ஊட்டுபவனும் இறைவனே; அவற்றைப் போக்கிக் கொள்ள அருள்செய்பவனும் இறைவனே' என்ற பேருண்மையை எப்போதும் மறத்தலாகாது. நம்பியாரூரர் வழி இதனை உலகு உணர்க் காட்டியுள்ளான் இறைவன்.

## குறுந்தொகையில் ஓர் உவமை :

அகப்பொருள் நூலாகிய குறுந்தொகை என்னும் சங்க இலக்கியப் பாடற்செய்தி ஒன்று இங்கு நினைக்கத் தக்கது. தாய் குழந்தையை அடிக்கிருள்; குழந்தை அழுகின்றது. அதற்கு அடிப்பவள் தாய்தான் என்று தெரியாமல் இல்லை. ஆயினும் குழந்தை என்ன கூறி அழுகின்றது? 'அம்மா' 'அம்மா' என்றே அலறுகின்றது. அதுபோல இன்பம் செய்து தலையளித்தாலும், இன்னுத துன்பம் தந்தாலும் தலைவனையன்றித் தலைவிக்குப் புகலிடம் ஏது? என்று கூறுகின்றது அச்சங்க இலக்கியப் பாட்டு. இதே நிலையினைப் பக்திநெறியிலும் இணைத்து நோக்கலாம். இங்கே தலைவன் இறைவன்; தலைவி உயிர். அவ்வளவுதான் வேறுபாடு. எத்துணை அழகாகத் 'தலைவிக்குத் தலைவனே எல்லாம்' என்பதனை இப்பாட்டு உணர்த்திவிட்டது!

"தாயுடன்றலைக்குங் காலையும் வாய்விட்டு
அன்னு என்னும் குழவி போல"

அழகிய இந்த உவமையே சுந்தரர் வாழ்வை எண்ணுங்கால் கருத்தில் முந்துகின்றது;

## தொடர்ந்த பயணம் :

"எம்பெருமானை வெவ்விய பிறவித்துயர் நீங்கப் பாடுவேன் என நினைந்து" என்கிருர் சேக்கிழார். 'அழுக்கு மெய்கொடு' என்ற பதிகம் மலர்கின்றது. திருமுல்லைவாயில் சார்ந்து பதிகம் பாடிப் பரவுகின்ருர்; "சங்கிலிக்காக என் கண்களை மறைத்தீர்" என்று சாற்றுகின்ருர். திருவெண்பாக்கம் சென்று, குவித்தகை தலைமேற்கொண்டு நின்று "கோயிலுளீரே" என்ற வன்றொண்டர்க்கு ஊன்றுகோலருளிய பெருமான் "உளோம் போகீர்" என்று

திருவாய் மலர்கின்றான். "பிழையுளன பொறுத்திடுவர்" என்று எடுத்துப்பாடிய ஆரூரரது பயணம் தொடர்கின்றது. காஞ்சி நகர் போந்து, மங்கை தழுவக் குழைந்த பிரான் மறைந்த இடக் கண் தரப் பெறுகின்றார். பல்வேறு பதிகளைப் பரவியவாறே திருவாரூர் போந்து வழிபடுகின்றார்; "மீளா அடிமை" என வெடுத்து அஞ்சொற் பதிகம் இசைக்கின்றார். கருணைத் திருக் கோக்களித்து மற்றொரு கண்ணும் கொடுத்தருள்கின்றார்.

வசந்தமே வருக !

இவ்வாறு, நம்பியாரூரரது வசந்தகால நினைவு திருவொற்றி யூரிலிருந்து அப்பெருமானைத் திருவாரூர்க்கு வரவழைத்தது. அதுமட்டுமோ? சபதம் மாறினால் - சூள் பொய்த்தால் - வாக்குத் தப்பினால் - ஆளுடைய நம்பிகளாயினும் தண்டனை ஏற்றே தீர வேண்டும் என்ற உண்மையை உலகம் உணர நல்ல சான்று யிற்று.

இந்த ஆண்டில், வசந்தகாலம் தொடங்கும் இந்த வேளையில் நம்பியாரூரரது நல்வாழ்வை நினைவுகூர்ந்து நாமும் 'வசந்தமே வருக' என்று நல்வரவு கூறுவோம்; அத்துடன் இக்காலத்தே நடைபெறும் திருக்கோயில் விழாக்களைக் கண்டு களிகூர்ந்து இருமைப் பயன்களும் எய்துவோம் என்று உறுதிபூண்போம்.

---

## சமயச் சின்னத்தின் மகிமை

"வாழப்பாடி சிதம்பரனார் தெருவில் உள்ள கிறித்தவ அன்பர் சவரிமுத்துஎன்பவரின் குழந்தைக்கு ஒருவாரமாக உடல் நிலை கவலைக்கிடமாக - காய்ச்சல் சளியுடன் இருந்தது. வைத்தீசுவரன்கோயில் விபூதியும், திருச்சாந்துருண்டையும் தோத்திரம் செய்து கொடுத்தபின் இருபத்துநான்குமணி நேரத்தில் குழந்தை நலம் பெற்றுச் சுகமாக உள்ளது" என்றும், "பெத்த நாயக்கன்பாளையம் திரு. R லக்ஷ்மிநாராயணசெட்டியார் மனைவி திருமதி. வாசவாம்பாள் வயிற்றுப் புண்ணால் வருந்துவதை அறிந்துவேலூர் விபூதிப்பிரசாதத்தையும், திருச்சாந்துருண்டையையும் கொடுத்து அருந்தச்செய்ததில் அவர்கள் நலமடைந்து வருவதாக எழுதியுள்ளார்" என்றும் வாழப்பாடி நகர தெய்வீகப் பேரவை செயலர் திரு. வா. மு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தெரிவிக்கிறார்.

---

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# புத்தாண்டு அருள் ஆசி

காலசக்கரம் சுழன்றுகொண்டே இருக்கிறது. காலத்தை மக்கள் மிகவும் நுனித்தறிந்து விநாடி முதல் ஓராண்டு வரை கணக்கிட்டு அவற்றை இறந்த காலம் நிகழ் காலம் எதிர்காலம் எனப் பகுத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்திவருகின்றனர்.

உண்மையில் ஆராயும்போது நிகழ் காலம் என்பதொரு காலம் இல்லை. நடந்தது இறந்த காலம், நடக்க இருப்பது எதிர் காலம் எனக் காலத்தை இரு கூறுக்குதலே பொருத்தமாயினும் உண்ணுதல் உறங்குதல் போலத் தொடர்ந்து நிகழும் செயல்களைக் குறித்தற்கு நிகழ் காலம் என்ற ஒன்றையும் கூட்டிக் காலம் மூன்று எனப் பகுத்தனர் நம் முன்னோர்.

மனிதனின் எண்ணம் வருங்காலத்தைப் பற்றியதாகவே அமைதல் வேண்டும். கடந்த காலத்தில் தான் வாழ்ந்த சிறப்புக்களை எண்ணிக்கொண்டே இருப்பதாலோ துன்பங்களை எண்ணி வருந்திக்கொண்டிருப்பதாலோ பயனில்லை. ஓரளவு கடந்தகால அனுபவங்கள் எதிர்கால வாழ்வுக்குத் துணைசெய்யும். எதிர்கால சிந்தனையே மனிதனை ஈடேற்றவல்லது. கடந்த கால இன்பத்துன்ப நிகழ்ச்சிகளை மறக்க மறதி என்ற பண்பை இறைவன் மனிதனுக்கு அளித்துள்ளான். மனிதன் நல்ல வண்ணம் வாழ மறதி உதவுகிறது. வள்ளுவரும்,

> "எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
> மற்றன்ன செய்யாமை நன்று"

என்று கூறுகிறார். 'மற்றன்ன செய்யாமை நன்று' என்பதற்குக் கடந்த காலத்தில் தான் செய்த தவறுகளையே எண்ணி வருந்தியிராமல் வருங்காலத்தில் நல்லன செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதே பொருள்.

வருகிறது புத்தாண்டு. புதுமையை விரும்பாதவர் எவருமே இலர். எல்லோருக்கும் இனிமை தரும் புதுமையை நல்வரவு கூறி வரவேற்போம். சோர்வு நீங்கி சுறுசுறுப்புப் பெறுதற்கும் துன்பம் நீங்கி இன்பம் பெறுதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுதற்கும் புத்தாண்டு துணைசெய்வதாகுக.

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகவும், பின்னைப் புதுமைக்குப் பேர்த்தும் அப் பெற்றியனாகவும் விளங்கும் அவ்விறைவனருளால் இராக்ஷஸ ஆண்டு இனிய நல்லாண்டாக மலரட்டும்.

ஆனந்த ஆண்டில் ஆனந்தம் ஓரளவே இருந்தது. தமிழகம் முழுதும் தண்ணீர்த் தட்டுப்பாடு, வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியும் வறண்டு காணப்படும் நிலை ஏற்பட்டன. இருப்பினும் இந்நாட்டு மக்களுக்கு இருக்கும் தெய்வ நம்பிக்கையாலும் அத்தெய்வபலத்தாலும் மக்கள் ஓரளவு மன நிறைவுடன் வாழ்ந்தனர்,

வருவது இராக்ஷஸ ஆண்டு. இராக்ஷஸ என்பதற்கு தீமை செய்யும் இயல்பினது என்பது பொருள். வான்மீகி இராமாயணத்தில் இச்சொல் பாதுகாப்புத்தருவது என்ற பொருளிலும் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு மக்கள் தீமைகளிலிருந்து நீங்கி நன்மைகள் பெற்றுப்பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

இவ்வாண்டில் மக்கள் தங்கள் தங்கள் காரியத்தைமாத்திரமே கவனிப்பர் என்றும், பயிர்கள் விலைவாசி மழை இவை நடுத்தரமாக இருக்குமென்றும், மக்கள் அனைவரும் தங்கள் கடமைகளைச் செய்வதில் சோர்ந்திருப்பர் என்றும் சோதிட நூல் கூறுகிறது.

நவக்கிரகங்களால் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுபட மக்கள் தெய்வவழிபாடுசெய்து, குருமொழிகடைப்பிடித்து, வேத விதிகளைப் பின்பற்றி தூய்மையான மனம் உடையவராய் ஜபம் முதலியவற்றைச் செய்து வாழவேண்டும். எத்தனை அறிவியல் முன்னேற்றங்களை நாம் பெற்றாலும், ஆன்மீகத்துறையில் நாம் முன்னேறவில்லையானால் வாழ முடியாது. தெய்வ பலமே மனிதனைக் காப்பாற்றவல்லது என்பதை உணரவேண்டும்.

இயற்கை கடவுளின் சக்தியால் இயங்குவது அது நமக்கு ஒத்துழைப்புத்தருவது நம் முயற்சியால் இல்லை. காற்று மழை போன்ற இயற்கைப் பொருள்கள் அவனருளாலேயே இயங்குகின்றன. இயற்கையின் நலங்களை நாம் பெறுதற்கு அவ் இறைவன் அருள் தேவை.

மக்கள் அறவுணர்வும் பக்தி உணர்வும் உடையவர்களாய் வாழ்வதற்கு இந்நாளில் உறுதி மேற்கோடல் வேண்டும். உலக வாழ்வில் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை ஒவ்வொருவரும் வழுவாது செய்தல் வேண்டும். மனிதர்களில் பலர் மற்றவர் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றனரே தவிர தாங்கள் தவறின்றி வாழவேண்டும் என்று விரும்புவது இல்லை. எல்லோரும் தத்தம் கடமைகளைச் சரியாகச் செய்வதைப் பொறுத்தே எல்லாச் செயல்களும் உலகில் நிகழ்கின்றன. அஞ்சலகத்தின் வழியாக ஒருவருக்கு மணியார்டர் செய்யப்படுகின்றபணம் எல்லோரும் கடமையைச் சரியாகச் செய்வதைப் பொறுத்தே உரியவருக்குப் போய்ச் சேருகிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலை செய்யும் கட்டிடம் எல்லோரும் கடமைகளைச் சரியாகச் செய்வதைப் பொறுத்தே மேலோங்கி எழும்புகிறது. மக்கள் தங்கள் தங்கள் கடமைகளை வழுவாது செய்யும் உணர்வைப் பெற வேண்டும்

நித்யகர்மானுஷ்டானங்கள் எனப்படும் சமய ஆசாரங்களை வழுவாமல் கடைப்பிடிக்கவேண்டும். அன்பு நெறி அற நெறி அருள் நெறிகளில் பழகி செம்மனச் செல்வர்களாக விளங்க வேண்டும். இத்தகைய அறநெறியில் சிலரேனும் வாழ்வதால் தான் உலகம் வாழ்கிறது என்று கூறுகிறார் புறநானூற்றுப் புலவர் ஒருவர்.

இதை அடியொற்றி "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்ற பாடல் தொடர் எழுந்தது. "மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை மழையும் தவமிலார் இல்வழி இல்லை" என்பது பெரியோர் மொழி. இக்கருத்துக்களை மனத்தில் இருத்தி எல்லோரும் நல்லவராய் இன்பங்கள் பலவும் பெற்றுச் சிறந்து வாழ இராக்ஷஸ ஆண்டில் உறுதிகொள்வார்களாக

அன்பர்கள் அனைவரும் பின்வரும் சொக்கநாத வெண்பாவைப் புத்தாண்டில் ஓதி நலம் பெறுவார்களாக.

"உனக்குப் பணிசெய்ய உன்றனையெந் நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா — மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநாதா."

நாடு செழிப்படையவும் நாட்டு மக்கள் எல்லா நலங்களும்பெற்றுச் சிறந்து வாழவும் துணைபுரியவேண்டுமாறு செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

# தில்லையும் தருமையும்

திரு. என். இராமகிருஷ்ண

தில்லைத் தலத்தை "சத்" என்றும், "சபா" என்றும் உபநிடதம் கூறும். "பரம்" என்றும், "சத்யம்" என்றும் உரைக்கும். "மகத்" என்று புகழும். "விவிக்தம்" என்றும், 'அற்புதம்" என்றும் விளக்கும். "புண்டரீகம்" எனப் புகலும். "குகை", "ஞானனந்தம்", "பரமவியோமம்", "பரமாலயம்" என்றெல்லாம் உபநிடதங்கள் கூறுகின்றன.

ஞான நிலையில் தில்லைவனத்தைப் பற்றிப் பின்வருமாறு பெரியோர் கூறுகின்றனர் உடம்பில் இடைநாடி இடப்பக்கமாகவும், பிங்கலைநாடி வலப்பக்கமாகவும் போகும். அதுபோன்று இப்பரதகண்டத்தில் இடைநாடி இலங்கைக்கு நேரேபோகும். பிங்கலைநாடி இமயமலைக்கு நேரே போகும். இந்த இரண்டிற்கும் நடுவே சுழுமுனை நாடி செல்லும். அச்சுழுமுனை நாடி தில்லைவனத்திலே சென்று கூடும். அங்கேயே நிலையான அம்பலம் உள்ளது. அங்கு இறைவன் ஆனந்தக்கூத்து ஆடுகின்றன். கோயிற் புராணத்தே உமாபதி சிவாசாரியார் இந்த உண்மையை விளக்குகின்றார்.

உலகம் ஒரு புருஷ வடிவம் என்பர். அதற்கு மூலாதாரத் தானம் - திருவாரூர். மணிபூரகமாக விளங்குவது - திருவண்ணமலை. இதயமே - சிதம்பரம். கண்டமே - காளத்தி. புருவ மத்திமமே - காசி என்றுரைப்பர். எனவே உலக புருஷனின் இதயமாக சிதம்பரம் விளங்குதல் அறியலாம். இந்த இதயத் துடிப்பாக, ஆடலாக, நடராஜப்பெருமானின் அருளாடல் இல்லை என்றால் உலகமே இல்லை என்று கூறுவர்.

தில்லை முத்தித் தலங்களுள் முதலாவதாக விளங்குகின்றது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய திருப்பாட்டினல் இவ்வுண்மை புலனாகின்றது.

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்."

சைவ சமயத்தில் உயிர்த்தலமாக விளங்கும் இத்தில்லைவனமே கோயில் என்ற பெயருடன் விளங்கும் தலம். பஞ்சபூதத் தலங்களுள் இது ஆகாயத்தலம் என்று கூறப்படுகின்றது இத்தலத்தை வழிபட்டு உயர்ந்தவர் பலர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர்கள், மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய சந்தான குரவர்கள், வியாக்கிரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், உபமன்யு முனிவர், தில்லைவாழ் அந்தணர்கள், வியாச முனிவர், சுக முனிவர், சௌனக முனிவர், சைமினி முனிவர், சூத முனிவர், ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர், ஸ்ரீ குமரகுருபரர் முதலியோர் ஆவர்.

சிதம்பரத்தைப்பற்றி பிரபந்தங்கள், புராணங்கள், சாத்திரங்கள் பல உள்ளன. அவைகளில் சிறப்பானவை :- தலபுராணங்கள் உமாபதி சிவாசாரியார் அருளிய கோயிற் புராணம். திருமலைநாதர் அருளிய சிதம்பர புராணம், யாழ்ப்பாணத்து தெல்லிப்பழை சிவானந்தையர் இயற்றிய புலியூர்ப் புராணம், சபாபதி நாவலர் இயற்றிய சிதம்பர சபாநாத புராணம். பிரபந்தங்கள் :- பட்டினத்தார் அருளிய கோயில் நான்மணிமாலை, சேரமான் பெருமாள் நாயனார் அருளிய கோயில் நான்மணிமாலை, நம்பியாண்டார்நம்பிகள் அருளிய கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம், இரட்டையர் பாடிய தில்லைக் கலம்பகம், குமரகுருபரர் அருளிய சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை குகை நமச்சிவாயர் அருளிய சிதம்பர வெண்பா. சிவஞான தேசிகர் அருளிய நடராசர் திருவருட்பா. சிதம்பரநாத முனிவர் செய்தருளிய நடராஜ சதகம் முதலியவை குறிப்பிடத்தக்கவை. திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் அருளிய “திருக்களிற்றுப்படியார்” என்ற சாத்திர நூல், பஞ்சாக்கரப் படியில் வைக்கப் பெற்றதும், அப்படியிலுள்ள திருக்களிற்றுக்கை நிமிர்ந்து அதை நடராஜப்பெருமான் திருவடித்தாமரைகளில் வைத்ததும ஆகிய சிறப்புடையது. இவ்வாறே நடராஜப்பெருமான் கோயிற்கொடியேற்றுதற்பொருட்டு உமாபதி சிவாசாரியார் பாடியருளிய கொடிக்கவி இத்தலத்தெழுந்த சாத்திரமாகும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய பதினொரு திருப்பதிகங்கள் தில்லைக்கு உண்டு. மணிவாசகப் பெருமான் திருவாசகத்திற்கு வாச்சியம்வார் ஆ நடராஜப்பிரானே என்று கூறி இப்பிரானுடன் இரண்டறக் கலந்தருளினார். இவர்

( இதன் தொடர்ச்சி 230 ஆம் பக்கம் பார்க்க )

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 34. இதழ் 4. பக்கம் 158 இன் தொடர்ச்சி )

ஆசை யுற்றுழல் சூக ரங்கள்
அசுத்தம் மேவி அளைந்துதின்
றேசு கித்தன வாயி டும்சுகம்
ஏழை யோடுறும் இன்பம்நீர்
மாச தற்றொளிர் நித்த சுத்த
வளந்த ருஞ்சுக வாரிகாண்,
ஈச னுக்கடி மைத்தி றத்தின்
இயைந்து நாம்பெறும் இன்பமே. 60

## இதன் தெளிபொருள்

உலகாயத மதத்தின்படி நீ மகளிரோடு கூடிப் பெறுகின்ற இன்பம், அசுத்தத்தையே விரும்புகின்ற பன்றிகள் அதனை அடைந்து அதில் மூழ்கித் தின்று அதனாலே மகிழ்கின்ற இன்பம் போல்வதே. அவ்வாறன்றி, இறைவனுக்குச் செய்யும் தொண்டின் திறத்தால் அவனோடு இரண்டறக் கலந்து நின்று யாம் பெறுகின்ற இன்பம், என்றும் அழிவில்லாதாய், பெரிதும் தூயதாய் மிக்க நீரை உடைய. தூய, கரையற்ற ஆழ்கடலில் குளித்து மகிழும் இன்பம்போல்வதாம்.

## விளக்கம்

'அசுத்தம்' எனப் பின்னர் வருதலின், ஆசையுறுதலும் அதன்மேலதே யாயிற்று. "அசுத்தம்" என்றது இடக்கரடக்கல்.

குரோத மேகுண மாயி ருந்தவர்
சாந்தி மேன்மை குறிக்கொளார்;
அராக மேஅணை வார்கள் ஆசை
யறுத்த இன்பம் அறிந்திடார்;
பராவு தேவர் பராவு தூய
பராப ரன்அடி பற்றுநீ;
விராவு மெய்யில் விடாத இன்பம்
விளைந்தி டும்இது மெய்ம்மையே. 61

## இதன் தெளிபொருள்

வெகுளியையே தங்களது குணமாகக் கொண்டவர்கட்கு அமைதியால் உண்டாகின்ற இன்பம் விளங்கமாட்டாது. ஆசையையே மிக உடையவர்கட்கு ஆசையை விடுத்து நிராசையாய் இருத்தலால் விளைகின்ற இன்பம் தோன்ற மாட்டாது. (அவை போல, மலத்திரளாகிய மாதரால் வருகின்ற சிறிது இன்பத்தையே விரும்புகின்ற உனக்கு நின்மலனாகிய இறைவனால் வரும் பேரின்பத்தின் தன்மை விளங்கமாட்டாது. ஆயினும், உன்மீது கொண்ட இரக்கத்தால் சொல்லுகின்றோம்) ஏனைய பலராலும் துதிக்கப்படுகின்ற அன்ன பெரிய தேவர்களாலும் துதிக்கப் படுகின்ற, மேலானவர்க்கெல்லாம் மேலானவனாகிய சிவ பரம் பொருளினது திருவடியை நீ அடை, என்றும் அழியாத மெய்ம் மையாகிய அவனது அருட் குணங்களால் உனக்கு என்றும் நீங்காத எல்லையில் இன்பம் உளதாகும்; இது சிறிதும் ஐயத் திற்கு இடன் இல்லாத உண்மை.

### விளக்கம்

"பராவு தேவர்" என்றது, முன்பு, "வேதன் நாரணன் (25) எனக் குறிக்கப்பட்டவர்களை, விராவுதல் - இங்கு, என்றும் இருத்தல். மெய்யில் - மெய்யான பண்பினால், "மெய்ம்மையே" என்னும் ஏகாரம் தேற்றம். (29)

காம மாதி குணங்க ளைச்சுகம்
என்று கொண்டனை காதலால்;
தூமம் ஆர்அழல் அங்கி சீதம்
மலிந்த போது சுகமதரும்;
நாமம் ஆர்தரு சீதம் வெம்மை
நலிந்த போது தரும்சுகம்;
சேம மாகிய இன்ப மாம்மிகு
தெய்வ நன்னெறி சேரவே. 62

## இதன் தெளிபொருள்

நீ மகளிர் கூட்டம் முதலியவற்றால் விளையும் உலக அனுபவத்தை 'இன்பம்' என்று மயங்கி நிற்கின்றாய். உண்மையில் அவை அப்பொருள்களால் விளையும் இன்பம் அல்ல. பருவ நிலைக்கு ஏற்ப உனது உடற் கூற்றினால் உன் உள்ளத்தில் எழுகின்ற காமம் முதலிய குணங் காரணமாக உனக்கு அவற்றின்மேல் உளதாகின்ற வேட்கையின் விளைவே. இதனை, புகைமேல் எழ எரிகின்ற கொடிய நெருப்பு உன் உடலில் குளிர் நிறைந்துள்ள பொழுது இன்பம் தரும் பொருளாய்த் தோன்றுதலும், வெப்பம் மிகுந்துள்ள பொழுது குளிர்ச்சியையுடைய நீர் இன்பம் தரும் பொருளாய்த் தோன்றுதலும் போன்ற அனுபவங்களால் அறிந்து கொள்ளலாம் (அஃதாவது, 'உடல் இன்பம்' என்பது புறப்பொருள்களால் அன்றி, உடலின் நிலைமையால் விளைவனவே எனவும், அதனால், அவ்வின்பம் என்றும், எப்பொருளிலும் ஒருபடித்தாய் நிலைத்திராது. உடலின் நிலை மாற்றத்திற்கு ஏற்ப மாறும் எனவும் உணரலாம்.) ஆனால், கடவுள் நெறியாகிய ஞானத்தின் வழி மெய்ப்பொருளை அடைந்து பெறும் இன்பம், அப்பொருட்கும் நமக்கும் இடையே நிற்ப தொன்றும் இன்றி, நேரே அறிவினால் தலைப்பட்டு அழுந்தி நிற்பது ஆதலின், அவ்வின்பம் என்றும் மாறாது நிலைத்து நிற்கும் பேரின்பமாகும்.

### விளக்கம்

நாமம் – அச்சம். சேமம் – என்றும் இருப்பது.

இவை ஆறு செய்யுளாலும், அறிந்தோர் அறியாதார்க்கு அறிவு கொளுத்த வேண்டுதலாகிய கடப்பாட்டினைச் செய்தார் என்க. (30)

படிக்கும் நூல்கள் சிவாகமம்; பசு
பாசமோடு பதித்திறம்
எடுத்தி யம்புவ(து); ஈசன் வார்கழல்
ஏத்தி டுந்தொழில்; என்றுமே
விடுத்தி டும்பொருள் காம மாதிகள்;
வேண்டி டும்பொருள் ஈண்டருள்;
முடித்து மும்மலம் விட்டு நின்மல
னோடு நின்றிடல் முத்தியே. 63

## இதன் தெளிபொருள்

என்றும் கற்க வேண்டிய நூல்கள் சைவாகமங்கள். கற்றுப் பிறர்க்கு எப்பொழுதும் எடுத்துச் சொல்ல வேண்டியவை பாசம், பசு, பதி என்னும் முப்பொருள்களின் இயல்புகள். எக்காலத்தும் வழிபடத் தக்கன சிவபெருமானது திருவடிகள். என்றும் அணுகாது ஒழிக்கத் தக்கவை காமம் முதலிய குற்றங்கள். என்றுமே விரும்பத்தக்கது இறைவனது பேரருள். இனி, முடிந்த பயனாகிய முத்தியாவது, தவத்தை முற்றுப் பெறச்செய்து அதனால் ஞானம் பெற்று, அஞ்ஞானத்தைத் தருகின்ற மும்மலங் களை ஒழித்து, நின்மலனாகிய இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்றல். [இவையே நாம் உனக்கு முடிவாக உணர்த்துவன.]

### விளக்கம்

"என்றுமே" என்பது பிற இடங்களிலும் சென்று இயையும். முடித்தற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இருள் நீங்குதல் ஒளியாலன்றி ஆகாமைபோல, மலங்கள் நீங்குதல் ஞானத்தாலன்றி ஆகாமையால், அஃது ஆற்றலால் பெறப் பட்டது.

இதனால், 'தம் துணிபாகிய சித்தாந்தம் இது' என்பதைச் சில சொற்களால் முடித்து உணர்த்தினார், பக்குவம் எய்துமாயின் பயன்படுவதாக என்று.

உலகாயதன்மத மறுதலை முடிந்தது.

(தொடரும்)

---

## பார்வையாளர்கள் குறிப்பு

### தருமையாதீனம்

### ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம், குறுக்கை

திருமுறை வழிபாட்டு அன்பர்கள் திருக்கூட்டத்தின் அன்பர் களுடன் குறுக்கை வீரட்டம் கண்டு வணங்க வந்தோம். தருமை ஆதீனத் திருக்கோயில்களுக்கே உள்ள ஒரு தனிச் சிறப்பு. திருக்கோயிலின் தூய்மை திருவுருவங்களின் தூய்மை, தெய்வ வழிபாட்டை மேம்படச்செய்கிறது. இந்நாட்டில் உள்ள எல்லாத் திருக்கோயில்களும் இவ்வழியைப் பின்பற்றினால் நம் சமயம் மேன்மைகொள் சைவமாகவே விளங்கும்.

(ஒ-ம்) Dr. T. சரோஜா M. B. B. S., D. G. O. B. SC. D. S. S.
(ஒ-ம்) V. S. நாராயணன் B. S. C.

8—3—75. Senior Chemist, Guindy.

# பாவின் அடிகளில் பாவும் அடிகள்

திரு. அ. கலியபெருமாள் எம். ஏ.,

சீர்பெறு காஞ்சி

மலர்பூத்த மணிப்புனல் பொய்கை. நடுவே மணப்பது நறுமலர்த்தாமரை. தாமரையகத்தே தங்கியிருப்பவள் திருமகள். பொய்கைக்குச் சிறப்பு பூத்த பங்கயம். பங்கயச் சிறப்போ தங்கிடும் மங்கை. நிலவுவரும் ஒரு தடாகந்தான். தடாகத்தை அலங்கரிப்பது தண்டக நாடு. அணிசெயும் திருமகள், அங்கே சீர்பெறுகாஞ்சி.

ஆரூர் விளக்கம்.

இனி, காவிரி பாயும் காவிரி நாடு காண்போம். தேரூரும் அழகான ஆரூர். நிலமகளின் அழகு நிலாவும் நெற்றி. நீண்டு விளங்கும் அந்த நெற்றியில் திலகம் நிகர்ப்பது திருவாரூர். செம்பியர் வாழும் அப்பதி; திருமகள் வாழும் செழுந்தாமரை போல் மலர்ந்து விளங்கிடும் செம்பதி! சேக்கிழார் கூறுகிறார் :-

" நிலமகட் கழகார் திருநீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்மகட்கு வண்தாமரை போல் மலர்ந்து
அலகில் சீர்த் திருவாரூர் விளங்குமால் "

விளங்கும் வீதி

கந்தபுராணம் காட்டும் கச்சி வீதி, சந்ததமும் தெய்வமணம் கமழ்வது. ஆடுவது சிவன் ஆட்டம்; பாடுவதும் அவன் பாட்டே. செவியெல்லாம் கேட்பது, புவியெல்லாம் காப்போன் கவியல்லவோ. சந்தமெல்லாம் ஏக சந்தம்: சொந்தமெல்லாம் இறையடியார் சொந்தம். இதோ காஞ்சி வீதியில் காலடி எடுத்து வைக்கின்றோம். இங்கேதான் எத்தனை எத்தனைக் காலடிகள்; கச்சி ஏகம்பனைத் தரிசிக்க வந்து போவார் காலடிகள்! ஏறிவரும் ஊர்தியின் காலடிகளில் எத்தனை வகை!

இதோ அன்னத்தின் அடிச்சுவடு. ஆதியும் அந்தமும் இல்லா அருப்பெருஞ் சோதியை வணங்கி மகிழ அயன் வந்து சென்றதன் அடையாளம். அதோ கருடனின் காலடிகள். அமலனின் பாதியாளன்கமலச் செல்வியின் காதலாளன், ஆனந்த மூர்த்தியைக் கண்டேத்த வாராமல் இருப்பானா? இது என்ன பெரிய காலடி! பார்த்தால் யானையின் காலடி போல் அல்லவா தெரிகிறது. ஓ விண்ணவர் கோமான். வேதவிழுப் பொருளைத் தொழவந்து போயிருக்கிறான்! இந்திரன் ஊர்ந்த தந்தியின் அடிகள் இவை. ஒருநாளா, இருநாளா. நித்த

நித்தம் அன்றோ, நேமியான் கருடன் அடிகளும், அயன்வரும் அன்னத்தின் அடிகளும், ஆயிரங்கண்ணோன் வாரணத்தடிகளும் வீதிதொறும் விளங்கித் தோன்றுகின்றன. மூவர் மட்டுமா; தேவரும் முனிவரும் ஏவரும் ஏகம்பனை ஏத்தற்குத் திரண்டு வரும் இடம் காஞ்சி. அடிபாவும் பாவின் அடிகள் காண்போம்.

'ஆதிநான்முகன் எகினத்தின் அடிகளும், அமலன்
பாதியாளன்தன் உவணத்தின் அடிகளும் பனிக்கார்
நாதன் ஊர்தரு தந்தியின் அடிகளும் நாளும்
வீதி வீதிகள் தொறுந்தொறும் காண்வர விளங்கும்"

**மணக்கும் வீதி :**

காட்சியில் இருந்து காஞ்சி மறைகிறது; ஆரூர் அழைக்கிறது அடடா. வீதியெல்லாம் சோதி மயம். தூரத்தில் வரும் போதே கண்ணைப் பறிக்கும் சுடர் விளக்குகளா? பகலொளியில் அகலொளியா? இவையெலாம் மண்ணிலே கிடந்தொளிரும் எண்ணிலா மணிகள். வீதியெங்கும் நறுமணம் வீசுகிறதே, என்ன மணம்? ஆ. தாமரைப்பூவின் காமரு வாசனை! வையத் தாமரையின் வாசனை அன்று; தெய்வத் தாமரையின் தேமணம். எப்படி வந்தது இச் செப்பரு நறுமணம்? புரிகிறது. மணப்பது எம்பெருமானின் திருவடி அம்புயம் அல்லவா?

ஆரூர் வீதியில் அயிராவணத்தான் நடந்து போனதும் உண்டோ. பரவையாரிடம் தூது போம்படிச் சுந்தரர் பரவ, பரமனும் தன் செந்தாமரை அடிவைத்துப் பார்மேல் நடந்து போகவில்லையா. ஆழ்பொருளாய் விளங்கும் அடிகாணப் பன்றியாய் அகழ்ந்து சென்றும் நெடியோனும் அறியான். உயர்பொருளாய் விளங்கும் முடிகாண அன்னமாய் ஓங்கிப் பறந்தும் ஈரிரு முடியோனும் அறியான். அவர்க்கெலாம் எட்டாத அருமையான், தேடித் தொடர்ந்து வன்றொண்டரைத் தோழனாக நாடிக் கொண்டது அருமையன்றோ! வேதப்பொருளுக்கும் எட்டாத பாதம் பரவியா தொண்டருக்காக ஒரு மாதுபால் தூது நடந்தது சாதாரணச் செய்கையோ! ஏயர்கோன் கலிக்காமர் வருந்திட அன்பிற்கு எளிவந்த ஆண்டவன் நடந்த நடை அது. அப்படி நடந்துபோன செந்தாமரை அடிதான் ஆரூர் வீதியில் மணக்கிறது. அடிபாவும் பாவின் அடிகள் காண்போம்.

'படர்ந்த பேரொளிப் பன்மணிவீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தாமரையடி நாறுமால்"

மாதேவனைத்தேடிச் செல்லும் தேவர் ஊர்திகளின் காலடி வண்ணம் – கச்சியிலே; அந்த மாதேவன் ஒரு தொண்டருக்காக வந்துபோன அடி வண்ணம் – ஆரூரிலே!

# திருத்தொண்டத் தொகைத் திறன்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், செஞ்சொற்கொண்டல்,

டாக்டர். தி ரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

(மலர் 34. இதழ் 4, பக்கம் 163 இன் தொடர்ச்சி)

**தமிழகத்தின் பண்பு விளக்கம் :**

பழந்தமிழ் மக்கள் ஈகையை அறம் எனக்கொண்டு போற்றிய பெருஞ்சிறப்புடையவர்கள். "செல்வத்துப் பயனே ஈதல்" என்று புறநானூறு கூறுவது தமிழகத்தின் மாண்பினை எடுத்துக் கூறுவதாகும். இல்லை என்ற சொல்லை எடுத்துக் கூறுவதை ஒரு பெரிய இழிவாகப் பழந்தமிழர் கருதினர் "ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர், ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று" என்ற புறம் பாடுகின்றது. இந்த அறத்தைப் பொதுமறையாகிய திருக்குறளும் ஓர் அதிகாரமாக விரித்துப் பாடுகின்றது. "இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலன் உடையான் கண்ணே உள" என்பார் வள்ளுவர் உயிர்க்கு ஊதியமாவது ஈதலும் இசைபட வாழ்தலுமே என்பது வள்ளுவர் வகுத்த கோட்பாடு. "இரப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு அருளை வைத்தார்; கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்" என்று அப்பரடிகளாரும் அறிவுறுத்துவர். நம்பியாரூரர் இவ்வுயர்ந்த கோட்பாட்டை இத்திருத்தொண்டத் தொகையுள் இனிது புலப்படுத்தியுள்ளமை கூர்ந்துணரத்தக்கது.

"இல்லையே என்னாத இயற்பகை", "வள்ளல் மானக்கஞ்சாறர்", "சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலி", "கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவார்" என்பனவற்றை இந்நோக்கிற் காண்டல் வேண்டும். "இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்", "இரப்பார்க்கொன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்" "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு" ஆகிய குறள் அறங்கள் இங்கு மலர்ந்து அருள்மணம் வீசக் காண்கின்றோம்.

அரசு புரியும் பெரும் பேறு பெற்ற மன்னர்களைக் கடவுள் மணம் கமழக் காண்டல் தமிழ் இயல்பு. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும் தமிழ் இயல்பைப்

பொது மறையாகிய வள்ளுவமும் பாடிற்று. "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்று வைணவ நெறியும் விளக்கிற்று மன்னரைத் திருமாலோடு ஒப்பிட்டுக் கூறுவது "பூவை நிலை" என்னும் புறத்திணை சார்ந்தது என்று பழந்தமிழ் இலக்கணம் எடுத்துரைக்கும். நம்பியாரூரரும் "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்" எனப் பாடும் போது, 'பெருமான்" என்ற சொல்லால் கழற்சிங்கப் பெருமன்னரைச் சுட்டுதலை இந்த நோக்கிற் காண்கின்றோம். தென்னவனாயுலகாண்ட செங்கணானை" யும், "மும்மையாலுலகாண்ட மூர்த்தி" யையும் பக்தி உணர்வு ததும்ப எடுத்துப் போற்றுகின்றார் நம்பியாரூரர்.

காணப்படும் இந்த உலகத்தைக் கடவுள் மயமே என்று கண்டு தெளிந்து மனம் கனியும் மாண்பினர் நம்பியாரூரரைப் போன்ற நல்லோர். "தானலாதுலகமில்லை" என்று பாடும் அப்பரடிகள், உலகமே சிவம் என்று கண்டவர். அவ்வாறே உலகின் அழகைச் சுந்தரர் இப் பதிகத்துள் சில இன்றியமையாத அடைமொழிகளிற் புலப்படுத்துகின்றார். விறன் மிண்டர் தோன்றிய 'குன்றை' ஊரை "விரிபொழில் சூழ்" எனக்குறித்துப் பொழில் வளம் போற்றுகின்றார். நீர்வளம் செறிந்த பொய்கைகள் சுந்தரரது திருப்பார்வைக்குத் தப்ப வில்லை. "அலைமலிந்த புனல்" என்று விரித்துரைக்கின்றார். அந்த அலைகள் எழுப்பும் சிறு ஒலி அவரது திருச்செவிகளுக்குத் தப்பவில்லை. "ஒலிபுனல்" என்று உரைக்கின்றார். காழியைச் சூழ்ந்த கடல்நீர் காழிக்குக் கவின் தந்ததால், "கடற்காழி" என்றுரைப்பார். மயிலாப்பூர்க் கடற்கரையில் அலைவழியே வந்து ஒதுங்குகின்ற செம்பவளங்கள், இருளை ஒட்டிப் புத்தொளி பாய்ச்சுகின்ற அற்புதக் காட்சி நம்பியாரூரரது அழகு நோக்கிற்குப் புலனாகின்றது; "துறைக்கொண்ட செம்பவளம் இருளறுக்கும் சோதித்தொன் மயிலை" என்ற சொற்கள் கவிநயத்துடன் வெளிப்படுகின்றன. திருஞானசம்பந்தரை எம் தலைவர் என்று போற்றுகின்றார் நம்பியாரூரர். சிவபிரான் சேவடிகளையன்றி வேறு பிறவற்றைப் பேணாதவர் சம்பந்தர் என்று விளக்குகின்றார். "வம்பரு வரிவண்டு மணநாற மலரும் மது மலர் நற்கொன்றையான்" என்ற சொற்கள் கொன்றை மலர்களின் நறுமணத்தையும். தேன் உண்ணப் புறம் சுற்றும் வண்டுகளின் ஒலியையும் அழகுறப் படம் பிடிக்கின்றன. இறைவனின் பேரருள் வடிவமாக உலகைக் காணுதலும், அவ்வுலகத்தியற்கைக் காட்சிகளை இன்புற்று அநுபவித்தலுமே கடவுளோடு கலக்கின்ற பேரின்பத்தைத் தருவன. ஆம் இந்தச் செய்தியையே நம்பியாரூரது வாக்கு உணர்த்துகின்றது எனலாம். "அல்லிமென்

முல்லையந்தார் அமர்நீதி," "ஆர் கொண்டவேற் கூற்றன்" "மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழி", "வரிவளையாள் மானி" - என்பனவும், மாலைகள் அணிகலங்களைச் சுந்தரர் நோக்கியுள்ள நுட்பத்தையே காட்டுகின்றன.

நாயன்மார்களது உண்மையும் நேர்மையும் நம்பியாரூரரது நெஞ்சைக் கவர்கின்றன. வாய்மை யறம் வழுவாத நாயன்மார்களது வாழ்வு பற்றி அவர் வழங்கும் குறிப்புகள் நமக்கு இனிது துணை நிற்பன. "மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க", "பொய்யடிமை யில்லாத புலவர், மெய்யடியான்" போன்ற தொடர்களைத் திருத்தொண்டத் தொகை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாய்மை நெறியே கடவுளையடையும் திருநெறியாகத் திருநாவுக்கரசர் கொண்ட பெருநெறி என்பது ஆரூரர் கருத்து. இது "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட" என்ற அடைமொழித் தொடராற் புலப்படுவதாகும். அன்றியும், இறைவன் திருவடியை உணர்ந்து இன்புறுதலே உண்மையான கலையறிவு என்ற கோட்பாட்டையே, கண்ணப்பரைக் குறிக்குங்கால் ஆரூரர் வெளிப்படுத்துகின்றார் என்று கூறலாம். இயற்கையிலேயே படிப்பறிவில்லாத வேடர் குலத்தைச்சார்ந்த காளத்தி வேடராம் கண்ணப்பரை, "கலை மலிந்த சீர் நம்பி" என்று குறிப்பதன் அடிப்படைக் கருத்து இதுவே யாகும். சென்ற பிறவிகளிற் கற்ற கலையறிவைச் சுட்டுவதாகவும் இதனைக் கொள்ளலாம். "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி, ஒருவற்கு, எழுமையும் ஏமாப் புடைத்து" என்ற பொதுமறை காட்டும் நெறி இது. அன்றியும், "முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட" என்று கண்ணப்ப நாயனார் புராணத்துச் சேக்கிழார் கூறுவது பழம்பிறப்புக்களிற் செய்த தவச் சிறப்பைக் கூறுவது போன்றே, பழம் பிறப்புகளிற் கற்ற கல்விச் சிறப்பை இது குறிப்பதாகலாம். பிறவிக்குருடர்க்கும் இக்கலையறிவான் ஆகிய தெய்வீக நோக்கு உண்டு என்பதனையே, "நாட்டமிகு தண்டி" என்ற அடைமொழியில் ஆரூரர் புலப்படுத்துகின்றார் என்று கொள்ளலாம். அடியவர்கள் எப்போதும் இறைவன் திருவடிகளை மறவார் என்பதனை 'மறவாது கல்லெறிந்த சாக்கியர்" என்ற சொற்களில் தெளிவு படுத்துகின்றார்; தன்னை முழுவதும் இறைவனின் திருவடிகட்கு ஒப்புக் கொடுக்கும் "சரணாகதித் தத்துவத்தையே" வற்புறுத்துகின்ற தொடர், "கறைகண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த" என்பதாகும். சைவ நாயன்மார்களது வாழ்வில் அடிநிலையாக நின்றது "தொண்டே" என்பதனை, "திருக்குறிப்புத் தொண்டர்" என்ற அமைப்பிற் காண்கின்றோம். இறைவன் நெஞ்சில் நின்று காட்டும் திருக்

குறிப்புக்கு ஏற்ற நிலையில் தொண்டு நிலைகளில் எதனையும் மேற்கொண்டு உயரும் நிலையைச் சுட்டுகின்ற நுட்பம் இங்கு காணக் கிடக்கின்றது.

**ஒப்பீட்டாய்வுகள் :**

திருத்தொண்டத் தொகை பக்தர்களின் குடியரசாகத் திகழ்கின்றது. தமிழர்களின் தலை சிறந்த மெய்யடியார்களின் தொகுப்பாக விளங்குகின்றது. இதனை விரிவாக ஆராய்ந்து தெளிவு படுத்துகின்றார், டாக்டர் திரு. மொ. அ. துரையரங்கசாமி அவர்கள். (The Religion and Philosophy of Tevaram - vol IV PP. 1090 - 1092; PP. 945 - 1060) இப்பகுதிகளில், திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணக் குறிப்புக்களையும், திருத்தொண்டத் தொகைக் குறிப்புக்களையும் ஒப்பிட்டு நுட்பமாக ஆராய்ந்து தெளிவுறுத்தும் ஆசிரியரின் அருட்புலமை வெளிப்படுகின்றது. திருத்தொண்டத் தொகைத் திறன் எவ்வளவு விரிவான சிந்தனைக்குரியது என்பதற்கு இவ்வாராய்ச்சி விழுமிய சான்றாகும் என்பது மிகையாகாது. பேராசிரியர் திரு சீனிவாசாச்சாரியார், நாயன்மார்களது அருள் வரலாற்றைக் கூர்ந்து நோக்கி பல்வேறு காலம், சாதி ஆகியவற்றைச் சார்ந்த அவ்வடியார்கள் ஒரு தனி ஆன்மீகக் குடியரசைத் தோற்றுவித்தவர்கள் என்றும், அவர்களது சைவ அநுபவங்கள் பொதுத் தன்மை உடையவை என்றும் தெளிவு படுத்துகின்றார். ("The devotion of Siva, Known as the sixtythree tondars or servants of 'Siva belong to all ages and castes and form a spritual democracy whose common quality was their deep Saivite experience" — Mystics and mysticision - P. N. Srinivasachari - PP. 232 - 234)

**திருத்தொண்டத்தொகை தரும் காலக்குறிப்பு :**

சுந்தரரது காலத்தை ஒருவாறு அறிந்து கொள்ளுதற்கேற்ற சொற்றொடர்க் குறிப்பு ஒன்றைத் திருத்தொண்டத் தொகை தன்னகத்தே கொண்டுள்ளதென்பது இறுதியாக நினைக்கத் தக்கது. "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான், காடவர்கோன் கழற் சிங்கன் அடியார்க்கு மடியேன்" என்பதே அது. இதனுள் "காக்கின்ற" என்னும் நிகழ்காலப் பெயரெச்சத்தால், தம் காலத்துப் பல்லவ மன்னனது ஆட்சி நிலவி வந்தமையை நம்பியாரூரர் நவின்றனராதல் வேண்டும் என்பது தமிழறிஞர் முடிவு. நரசிங்கன் என்ற இயற்பெயருடைய பல்லவ வேந்தனை இக்கழற் சிங்கனைக் கொள்ளுவர். கி. பி. 690 முதல்

720 வரை காஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்த இரண்டாம் நரசிம்ம வர்மன் இக்கழற் சிங்கனே என்று பன்னிருதிருமுறை வரலாற்று ஆசிரியா திரு. க. வெள்ளைவாரணனார் முடிவு செய்துள்ளனர்.

### சைவசமயம் தொண்டுச்சமயம் :

நம்பியாரூரரது அருட் செய்தியை இனிது விளங்கிக் கொள்ளும் தனித்துணையாக விளங்குகின்றது திருத்தொண்டத் தொகை. அகத்தியர் தம் தேவாரத் திரட்டுள் இதன் அருமை கருதி 'அடிமை' என்ற தலைப்பில் சேர்த்துள்ளார். சைவசமயம் தொண்டுச் சமயம் ( A Religion of service ) என்பதை உலகு விளங்கிக் கொள்ள வேண்டும் ஆயின் திருத்தொண்டத் தொகையை ஊன்றி உணர்தல் வேண்டும். ஒரு சமயம் நிலைபெற வேண்டுமாயின், மெய்யான தொண்டுகளாலும், அத் தொண்டு களை மன மொழி மெய்களாலாகிய உயர்நிலையில் இயற்றும் தொண்டர்களாலுமே அது நிலைபெறவியலும். மக்கள் இடையே தொண்டினால் மலராத எச்சமயமும் மன்பதையில் வாழ்வுபெற வியலாது சைவத்தின் இச்சிரிய வியல்பு திருத்தொண்டத் தொகையிலேயே விளங்கித் தோன்றுகின்றது. இதுவே இப்பதிகத்தின் தனித்திறன்; தனி நெறி; தனி இயல்.

---

## பார்வையாளர் குறிப்பு

### தருமையாதீனம்

### ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

சரபமூர்த்தி இருக்கும் இத்தலத்தைத் தரிசிக்கும் பாக்கியம் இன்று கிடைத்தது. எனக்கு தற்செயல் என்றாலும் இதை என்னால் மறக்கமுடியாது. ஆண்டவன் அருளால் இவ்வளவு வேலை களுக்கும் இடையில் ஆண்டவனைத்தரிசிக்க இன்னருள் புரிந்த அவன் கருணை என்னே? இத்திருக்கோயிலில்தான் சரபமூர்த்தி தென்னிந்தியாவிலேயே இருக்கக்கூடியது என்ற பெருமை கோயி லின் பெருமையை மேலும் உயர்த்துகிறது. கோயில் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டு எல்லோரும் மிகமிகப் பரிவுடன் நடந்து கொண்டது தரிசிப்பதற்கு மிக நல்லதருணமாயிற்று.

(S-d) K. T. Gurusamy,
E. E., P. W. D. Tanjore.

16—3—75.

# திருப்பள்ளி யெழுச்சி

டாக்டர். திரு. C. சீனிவாசன் M. Sc., Ph. D.,
F. B. B. S. (Lond), M. I. A. B. (Utrt).

( மலர் 34, இதழ் 4, பக்கம் 167 இன் தொடர்ச்சி )

நவ நிலைகளாவன :

1. விந்து
2. நாதம்
3. பரவிந்து
4. பர நாதம்
5. திக்கிராந்தம்
6. அதிக்கிராந்தம்
7. சம்மௌனம்
8. சுத்தம்
9. அதீதம், எனப்படும்.

அருள்நெறிப்பட்ட அடியார்க்கு இவற்றுள் விந்து நிலை சிதானந்த அனுபவத்தைக் குறிக்கும். அதாவது சித்து, ஆனந்தம் என்ற முதல் நிலை ஆதலின் முதற்கண் விழுப் பொருளே' என்றார். நாதநிலையாவது, சத்து, ஆனந்தம் என்ற நித்தியமான சதானந்த அனுபவத்தைக் குறிக்குமாகையால் "வாழச்செய்தோனே" என்றார். பரவிந்து நிலை, சச்சிதானந்த அனுபவத்தைத் தருமாதலின், தாம் நினைத்தொறும், காண் தொறும், பேசுந்தொறும், எப்போதும் ஆனந்தத் தேன் சொரியப் பூரித்து நிற்றலின் 'திருப்பெருந்துறையாய்' என்றார். திருப்பெருந்துறை தானே அடிகட்கு எல்லாமாயது: பர நாத நிலையாவது சிவானுபவத்தைக் குறிப்பிடும் என்பர். தமது ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி அடியிணை அருளிச் சிவமாக்கி, இந்த நிலையில் சிவானுபவமாகிய உலப்பிலா ஆனந்தம் நல்கி நிற்றலின் கண்ணகத்தே நின்று களிதருதேனே என்றார். "எனது என்பின் புரை உருக்கிப்பிணைத்தான் புகுந்து மனத்தான் கண்ணின் அகத்தான" எனவும் "என் கனிலே அமுதூறித் தித்தித்து" எனவும் கூறுதல் காண்க.

ஐந்தாவதுவிளி, 'கடலமுதே'என்பது, விண்ணகத்தேவரும் நண்ண முடியாதவனைக் கடலமுதே என்றார். அவன் அடியார் சிந்தனையில் தேனூறிநிற்கும் அமுதெனத் தேவர்கள் அறியாரா யினும் அவர் உண்டுகளித்த கடலமுதம் போன்றவனுதலை நினைவு கூர்தற்பொருட்டு, மேலும் இறைவனை "நவநிலைதரும்

ஓர் நல்ல தெள்ளமுதே, சிவநிலைதனிலே திரண்ட உள்ளமுதே" என்பர். நவநிலைகள் எல்லாமும் சிவநிலைகளேயாம். அவற்றுள் திக்கிராந்தம் மின்னல் ஒளி உடையது. அதிக்கிராந்தமாவது நாதம் ஓங்கி சப்தமாகிப் புலனாகும் சிவ நிலை. இவ்விரு சிவநிலைகளிலும் தெள்ளமுதாயத் தீஞ்சுவைக் கரும்பாய்த் தித்தித்து ஓங்குவான், ஆனந்த மாலேற்றும் அத்தன்.

அடுத்து எண்ணகத்தாய் என்ற விளி தம்மைச் சம்மௌன நிலைக்குட்படுத்தி எழுந்தது எனலாம் அஃதாவது ஆண்டவன் வழங்கும் அருளாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்கி அவன் அடியிணையை இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காமல் நிலைத்து வைத்துக்கொண்டு இன்புறும் சிவ நிலை அதனால் செறியும் கருத்தில் உருத்து அமுதாம் சிவபதத்தை "எண்ணகத்தாய்" என்று ஏத்துவாராயினர். இதற்குமேல் விளங்குவது சுத்தநிலை. மலரடி, சிலம்படி எனப்படும் ஒளியும் ஒலியும் பூரணப்பட்டுச் சிவானுபவத்தைச் சுத்தமாகத் தரும் மெய்நிலை. இதனைச் சுத்த சன்மார்க்கம், சிவதுரியாதீதம் என்று பகரும். சித்தாந்த சைவம் சுத்தாத்துவித மென விரித்துரைக்கும். சிவஞான முனிவர், "இவ்வத்துவிதம் ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலம் என்றுதல், விசிட்டம் என்றுதல், மறுதலை என்றுதல் யாதானும் ஒன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருள் உணர்த்துதலின், சுத்தாத்துவித மென வழங்கப்படும், ஈண்டுச் சுத்தம்என்பது யாதாலும் ஒன்றாக விசேடிக்கப்படாது நிற்றலை" என்று சுத்தாத்துவித சித்தாந்தத்தை விளக்குவாராயினர். இத்தன்மை வாய்ந்த ஞான சன்மார்க்க சுத்த நிலையிலே மணிவாசகர் 'இறைவனை உலகுக்கு உயிரானாய்' என்று அழைக்கின்றார். "கருத்து இருத்தி உளம் மன்னும்" முழுமுதலை ஆரத்துய்க்கும் அடிகள் ஏனைய உயிர்களையும் எண்ணுகின்றார் "யாக்கைக்கு உயிர் இயைந்தன்ன நட்பின்" உலகுயிர்கட்கெல்லாம் பக்குவத்திற்கேற்ப ஒன்றிநின்று இன்பந்தந்தருளும் சிவானுபவச் செல்வத்தை, உலகுக்கு உயிரானாய் என்று போற்றுதல் போற்றுதற்குரியது இவ்வொன்பதாம் திருப்பாடலில் ஒன்பதாவது விளியாக உள்ளது "எம்பெருமான்" என்பது. நவநிலைகளில் இறுதிநிலையை சுத்தம் என்பர். எல்லா நிலைகளிலும் எல்லா அனுபவங்களையும் சொல்லிவிட்டார். அதீத நிலைக்கண் ஆண்டவனைப் புணர்ந்து அனுபவிக்கும்போது "எம்பெருமான்" எனப் போற்றுதல் தானும் சிவானந்த மேலீட்டால் எழுவதாகும்.

இறுதித் திருப்பாடலைக் காண்பாம். இந்த நில உலகமே சிவபிரான் நம்மை ஆட் கொண்டருளும் இடமாகும் இதில் போய்ப்பிறவாமல் ஆற்ற நாள் போக்கினேம் என்று திருமாலும்

அலரவனும் விரும்பி நிற்கவும், திருப்பெருந்துறைப் பெருமானே! ஆர் அமுதே! நினது மெய் அலர்ந்த கருணையும் நீயுமாக இம் மண்ணகத்தே எழுந்தருளி எம்மை வாழச் செய்த இறைவனே! பள்ளி எழுந்தருள்வாயாக என்கிறார். செந்தழல் புரை திருமேனி காட்டிய அருட் பெருஞ்சோதிப் பெருமான் தமது கருணையுடன் தமது அலர்ந்த கருணையுடன், தமது மெய்க்கருணையுடன் வெளிப்பட்டமை "தனிப்பெருங் கருணை" வடிவினை ஒத்திருப்பது காண்க. நீயும் நின் கருணையும் என்னுது பந்தணை விரலியும் நீயும், என்றதைத் தொடர்ந்து, நின் கருணையும் நீயும் என்றார், அம்மையப்பனுய் மெய்யடியார்க்கு வெளிப்பட்டருளுதல் மரபாதலின். "சத்தியாய்ச் சிவமாகி", "அம்மையோடப்பனுகி", "அம்மையே அப்பா" என வருவன காண்க. மேலும் இவ்விறுதித்திருப்பாடலில் இறுதியாக 'ஆரமுதே' என்று அழைப்பதும் ஊன்றி நோக்குதற்குரியது. ஆண்டவன் அருளாரமுதம் வழங்குகின்றுன். அதனை அடிகள் வாரிக் கொண்டு விழுங்குகின்றுர். அது எப்படி இருக்கிறது?

"கரும்புறு சாறும் கனிந்த முக்கனியின்
விருப்புறு இரதமும் மிக்க தீம்பாலும்
குணங்கொள் கோல்தேனும் கூட்டி ஒன்றுக்கி
மணங் கொளப்பதஞ் செய்வகையுற இயற்றிய
உணவெனப் பல்கால் உரைக்கினும் நிகரா
வணமுறும் இன்பமயமே அதுவாய்
கலந்து அறிஉருவாய்க் கருதுதற்கு கரிதாய்
நலந்தரு விளக்கமும் நவிலருந்தண்மையும்
உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்
உள்ளதாய், என்றன் உயிர் உளம் உடம்புடன்
எல்லாம் இனிப்ப இயலுறு சுவையளித்து,
எல்லாம் வல்ல சித்து இயற்கையதாகிச்
சாகா வரமும் தனித்த பேர் அறிவும்
மாகாதலிற் சிவவல்லப சக்தியும்
செயற்கரும் அனந்த சித்தியும் இன்பமும்
மயக்கறத்தருந்திறல் வண்மையதாகிப்
பூரண வடிவாய்ப் பொங்கி மேல்ததும்பி
ஆரண முடியுடன் ஆகமமுடியுங்
கடந்து, எனது அறிவாம் கனமேல் சபை நடு
நடந்திகழ்கின்ற மெஞ்ஞான ஆரமுதே"

என்னுமாப் போல ஆரமுதம் ஆகிய நீ பள்ளி எழுந்தருள் வாயாக என்கின்றுர், சிவபரம் பொருளை அருளமுதமாக உண்டு தேக்கும் அடிகள்.

# நந்திக் கதம்பம்

"நஜன்"

(மலர் 34, இதழ் 4, பக்கம் 171 இன் தொடர்ச்சி)

## ஆட்கொண்டார் தத்துவம்

ஆட்கொள்ளுதல் என்பது ஒருவனை ஜீவபாவத்தினின்றும் நீக்கி அபயவடிவ சிவபாவத்தை உணர்த்திக் காத்தலேயாகும். காலம், தேசம், வஸ்துவென்னும் பரிச்சேத உணர்ச்சியுள்ளவரை ஜீவபாவமுண்டு. காலதேசவஸ்து பரிச்சேதமற்றநிலை அத்வைத அபயஸ்திதி. ஆட்கொண்டாரது தத்துவம் இந்த அபய நிலையேயாகும். நந்திகேசுவரர் காலவடிவபரசிவ பாவத்தைப் பெற்றார் என்பது சிந்திக்கத்தக்கது. இங்கு க்ஷேத்ரக்ஞன், பாலகன் என்பவரும் நந்தியே.

## சிவநிந்தனை பொறுக்கார்

ஒருசமயம் பிரும்மா செய்த யாகம் ஒன்றுக்கு நந்திதேவர் அனுப்பப்பட்டார். அங்கு தக்ஷன் சிவபெருமானை இழித்துக் கூறிய சொற்கள் அவர் காதில் விழுந்தன. உடனேயே இருகாது களையும் பொத்திக்கொண்டு "சிவ சிவ" என்றார். (இதுவே மந்திரம் சொல்லவேண்டிய முறை; நமது காதுக்கும் கேளாத படி மந்திரம் செய்யவேண்டும்) நந்திதேவர், தக்ஷன் தலை போகவேண்டும் என்றும் அதற்குப்பதில் ஆட்டுத்தலை உண்டாக வேண்டும் என்றும் சாபமிட்டார்

## இசைக் கலைஞர் நந்தி

நந்திப்பெருமான் முழவு இசைக் கருவியைக் கையாள்வதில் நிபுணர். ஆடல்வல்லானாகிய நடராஜமூர்த்தியின் திருக்கூத்து இவர் வாசித்த முழவு ஒலிக்கு இசைந்து நடைபெற்றது. தாள இசைக்கருவிகளில் சிறந்ததான முழவு மந்தகதியோடுபொருந்தி

யமைகின்றபோது ஆடற்கலை சிறக்கும் என்பது பண்டைய தமிழர்களின் அனுபவ உண்மை. ஆடல்வல்லானின் திருக்கூத்து இனிதியங்க நந்திபெருமானே முழவம் இயக்குவதாகக் குறிப்புகள் உள்ளன.

" நந்தி முழவங் கொட்ட நாதன் ஆடுமே "

— திருவாலியமுதனார் திருவிசைப்பா.

" நந்தி முழவுமுழங்க மலைபெறு நங்கை
மகிழ அணிந்த அரவுகள் நஞ்சுபிழிய முரன்று முயலகன்
நைந்து நால அலைந்த பகீரதி
அந்தி மதியோ டணிந்து தில்லைநகர் அம்பொன் அணியும்
அங்கண் அரசே " [ அரங்கின் நடம்நவில்

— கோயில் நான்மணிமாலை.

" துந்துபி குழல்யாழ் மொந்தைவான் இயம்பத்
தொடர்ந்து இருடியர் கணம் துதிப்ப
நந்திகை முழவம் முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயில் "

— கருவூர்த்தேவர் ' திருவிசைப்பா '

நந்திகேசுவரர் இறைவனிடமிருந்து நாட்டியக்கலையைப் பயின்று நூலும் இயற்றியிருக்கிறார். இவர் எழுதிய நூலின் பெயர் ' அபிநய தர்ப்பணம் '.

பரதநாட்டியத்தைப் பொறுத்தவரையில் ஆதாரத்துடன் உள்ளவை இரண்டே நூல்கள். அவை, பரத முனிவருடைய நாட்டியசாஸ்திரம் : நந்திகேசுவரருடைய ' அபிநயதர்ப்பணம் '. இந்நூல் வடமொழியில் உள்ளது. முன்னூற்று இருபத்தைந்து சுலோகங்கள் கொண்டது. நாட்டிய உற்பத்தி நடை பேதங்கள். சபாலக்ஷணங்கள், பாத்திரலக்ஷணங்கள், அபிநய வகைகள், சிரோபேதங்கள், திருஷ்டிபேதங்கள், அபிநயஹஸ்த லக்ஷணங்கள், நிருத்த ஹஸ்த லக்ஷணங்கள், பேதங்கள். கதிபாத பேதங்கள் ஆகிய விவரங்களை விரிவாகவும் தெளிவாகவும் கூறுகிறது இந்நூல்.

இந்நூலின் ஆரம்பத்தை நந்திதேவர் பின்வருமாறு தொடங்குகிறார். " எந்தப்பெருமானுக்கு உலகம் ஆங்கிசமோ ( அவயவங்களோ ). எந்தப்பெருமானுக்கு உலக பாஷை வாசிகமோ ( சொற்களோ ) எந்தப்பெருமானுக்கு சந்திரன்

நக்ஷத்திரம் ஆஹார்யமோ (ஆடையாபரணங்களோ) அந்த சாத்விக ரூபியான சிவபெருமானை வணங்குகிறேன்".

சிவனது தாண்டவத்தைப்பற்றி நந்திகேசுவரர் அவரிடமிருந்து உபதேசம் பெற்று தண்டு முனிவருக்குப் போதித்தார். தண்டு முனிவரிடமிருந்து பரத முனிவர் கற்ருர். பார்வதிதேவியிடமிருந்து கற்றலாஸ்யத்தை நந்திதேவர் பாணுசுரன் மகளான உஷைக்கு கற்பிக்க, உஷை துவாரகையிலுள்ள கோபிகளுக்கு அதைக் கற்றுக்கொடுத்தார். இம்மாதிரியாக நாட்டியக்கலை சாஸ்திரோக்தமாக பூமியில் பரவ மூலகாரணமாக இருந்தவர் நந்தியே. சுவடிரூபமாக இன்னும் அச்சில் ஏருமல் பரதார்ணவம் என்ற நூல் ஒன்றும் நந்திகேசுவரரால் இயற்றப்பட்டதென்று தெரிகிறது. இதற்கு 'நந்திப்பரதம்' என்றும் பெயர்.

## நந்திதேவரின் திருஉருவங்கள்

தமிழ்நாட்டில் மகாலிங்கப்கோயில் கொண்டுள்ள திருவிடைமருதூர் சிவன் கோயில் கர்ப்பக்கிரகம் என்றும், அதன் நந்தி இருக்கும் தலம். திருவாவடுதுறை என்றும் சொல்வதுண்டு. இங்கு நின்றகோலத்தில் அழகிய செப்புத் திருஉரு. அவசியம் காணவேண்டியதாகும். திருமழபாடியிலுள்ள அதிகார நந்தியும் சுயம்பிரபையும், மிக அழகான செப்புத்திருமேனிகள். அதிகார நந்திக்கு மனித முகமேயுள்ளது. திருவையாறு ஐயாறப்பன் நந்திதம்பதிகளை அழைத்துக்கொண்டுதான் ஏழூர்(சப்தஸ்தான) யாத்திரையை தொடங்குகிருர். இந்த சப்தஸ்தான யாத்திரையில் (சித்திரா பௌர்ணமியில் நடைபெறும்.) ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியுடனும், நந்திபம்பெருமான் சுயம்பிரபையுடனும் எழுந்தருளி திருப்பழனம், திருச்சோற்றுத்துறை திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்ற ஆறு தலங்களில் உபசாரங்கள் பெற்று மறுநாள் காலையில் திருவையாற்றுக்குத் திரும்புவார்.

அதிகார நந்தியை நின்றகோலத்தில் அஞ்சலி ஹஸ்தராக தரிசிக்கக்கூடிய மற்ருெரு தலம் திருவாரூர்.

நந்தியின் பெயராலேயே கர்நாடகத்தில் ஒரு மலை இருக்கிறது. பங்களூருக்கு முப்பத்தொருமைல் வடக்கிலுள்ள இம்மலை நந்திமலை எனப் பெயர் பெற்றுள்ளது அங்கு மலைமீதும், அடிவாரத்திலும் கோயில்கொண்டுள்ள இறைவனுக்கு நந்தீசுவரர் என்றே பெயர். கீழேயுள்ளவர் போகநந்தீசுவரர். மேலேயுள்ளவர் யோகநந்தீசுவரர். யோகத்தைக் கைக்கொண்டால்

மேலும் மேலும் உன்னத நிலையை அடையலாம் என்பதைக் குறிப்பிடுவதுபோல இக்கோயில்களின் பெயர்கள் அமைந்துள்ளன. மேலேயுள்ள கோயிலில் நந்திதேவர் யோகாசன நிலையில் அமர்ந்திருக்கிறார். மிக அபூர்வமான சந்நிதி.

மலையில் கோயிலுக்கு வெளிப்புறத்தில் ஒரு பிரும்மாண்டமான நந்தி உள்ளது கன்னடக்காரர்கள் நந்தியை பஸவண்ணு அல்லது பஸவப்பா என்றே அழைக்கிறார்கள். அந்த நந்திக்கு நெல்லிக்காய் பஸவப்பா என்கிறார்கள். நந்திக்கு எதிரில் ஒரு நெல்லிமரம் இருப்பது இப்பெயர் ஏற்படக் காரணமாக இருக்கலாம்.

சிவபெருமானிடம் நந்திதேவர் வேண்டிய பதினாறு பேறுகள் எவை தெரியுமா ?

1. மறைகள் நிந்தனை சைவ நிந்தனை பொறுமனம்.
2. ஐம்புலன்களுக்குஏவல் செய்யுறாச் சதுரும்.
3. பிறவிதீதெனுப் பேதையர் தம்மோடு பிணக்கும் உறுதி.
4. நல்லறம் செய்பவர் உறவு
5. யாது நல்லன்பர் கேட்கினும் உதவும் இயல்பு.
6. மாதவத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடும் மகிழ்வு.
7. நல்லுபதேசங்களை ஏற்கும் தன்மை.
8. அன்பர் தீது செய்யினும் சிவச்செயல் என ஏற்கும் தெளிவு.
9. மனமும் வாக்கும் நின் அன்பர்பால் ஒருப்படும் செயல்.
10. கனவிலும் சிவனடியாருக்கு அடிமையாதல்.
11. நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலை.
12. சிவன் புகழ் நாடோறும் உரைத்திடும் பொலிவு.
13. தீமையாம் புறச் சமயங்கள் ஒழித்திடும் திறன்.
14. பிறர் பொருள் விழைவுறா வளன்.
15. நன் நோன்பு நோற்றல்.
16. யான் எனது என்னும் செருக்குறாத்தன்மை.

இந்த வரங்களைஎல்லாம் நந்திதேவர் அவருக்காகக்கேட்கவில்லை. நாம் பின்பற்றவேண்டும் என்றே கேட்டிருக்கிறார்.

( தொடரும் )

# "தெய்வம் என்பதோர் சித்தம்"

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

( மலர் 34. இதழ் 4. பக்கம் 176 - இன் தொடர்ச்சி )

**பெர்ட்ரண்ட் ரக்ஸ்ல் :**

இவ்வாறே, உலகப் புகழ்பெற்ற மற்றொரு பேரறிஞரும், தத்துவகணிதமேதையும் ஆகிய பெர்ட்ரண்ட் ரக்ச்ஸல் அவர்கள் கூறுவதும், நம்மனோர் கருத்தில் இருத்துதற்குரியது. "நம் கால நிலைக்கு, வேண்டுவன சில இருக்கின்றன; விலக்கப்படவேண்டுவன சில உள்ளன. நான் கூறப்புகும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாதெனின், மிக எளிமையானதும், மிகப் பழமை முறையில் அமைந்ததுமான ஒன்றேயாம். நான் கூற முற்படுவது மிக மிக எளிமையும் பழமை முறையும் வாய்ந்ததாதல்பற்றி, ஒரு சிலர் என்பால் புன்முறுவல் பூத்து, என்னை ஏளனம் செய்யக் கூடுமே என்றஞ்சி, அதனைக் குறிப்பிடுவதற்கு நான் நாணுகின்றேன் அதனைக் குறிப்பிடுவதற்காக அருள் கூர்ந்து என்னை மன்னித்துவிடுங்கள் ; அன்பு ; 'இறைமை அன்பு' அல்லது சமய உணர்வோடு கூடிய இரக்கவுள்ளம் ஆகும். இவ்வுணர்வை நீங்கள் பெறுவீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழிகாட்டியும், மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள் ஆவீர்கள்" 7

---

7 "There are certain things that our age needs and certain things it should avoid. The root of the matter is a very simple and old fashioned thing, so simple that I am almost ashamed to mention it, for fear of the derisive smile with which the wise cynics will greet my words. The thing I mean - please forgive me for mentioning it - is love Christian love or compassion. If you feel this, you have a motive for existence, a guide in action, a reason for courage an impressive necessity for intellectual honesty".

— Dr. Bertrand Russel,
The Impact of Science.

எமர்சன் :

"கடவுள் ஒருவர் உண்டு என்பது, நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல்களை ஒரு சிறிது உன்னிப் பார்த்தாலே நமக்குப் புலனாகும். நமக்குமேற்பட்ட இயற்கைச் சட்டம் ஒன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதுதான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒழுங்குபடுத்திவருகின்றது. ஏதோ நம்மால்தான் எல்லாம் நடப்பதுபோலக் கருதிக்கொண்டு நாம் மேற்கொள்ளும் முனைப்பு மிக்க செயல்கள் ஒருவகையில் தேவையில்லாதனவும் பயனற்றனவுமேயாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல் நிலையில்தான், நாம் வன்மையுடையவர்களாகின்றோம். செருக்கற்ற பணிவுடைமையினால்தான், நமக்குத் தெய்விகநிலை கிடைக்கின்றது நம்பிக்கையும் அன்புமே நம்முடைய ஏராளமான கவலைச்சுமைகளினின்று நம்மைவிடுவித்து நமக்கு நலம் விளைவிக்கின்றன. ஓ! என் அன்பிற்சிறந்த உடன்பிறப்பாளர்களே! கடவுள் இருக்கின்றார்!"

"இயற்கைப் பொருள்களிலுள்ளும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திற்கு மேலும், கடவுள் என்ற ஓர் உயிர்ப்பொருள் உலவி நிலவிவருகின்றது. அதுவே நம்மை இயக்கிநிற்கின்றது உலக அமைப்பை நாம் ஏதும் பிறழச் செய்துவிடாதபடி அதுதான் கவனித்துக்கொள்ளுகின்றது. உலகப் பொருள்களிலெல்லாம் அது தன்னுடைய ஆற்றல்மிக்க கவர்ச்சித்திறனைப் பாய்ச்சி ஊடுருவச்செய்துள்ளது அதன் அறிவுரையை உடன்பட்டு ஒழுகும்போது, நாம் வளர்ச்சியும் செழிப்பும் அடைகின்றோம். அதன் சிற்றுயிர்களை நாம் வருத்த முற்படும்போது, அது நம் கைகளைப் பிணித்துவிடுகின்றது அல்லது நம்மையே காக்குமாறு செய்கின்றது. உலகப் பொருள் அமைப்புகள், செயல்கள் யாவுமே, கடவுள் ஒருவர் உண்டு என்று நமக்கு உணர்த்தி, நம்பிக்கைகொள்ளச்செய்யும் வகையிலேயே அமைந்திருக்கின்றன" 8 என்று ரால்ப்வால்டோ எமர்சன் என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர் கூறுவதும், ஈண்டு நம்மனோர் அறிதற்கு உரியது.

---

I do not pretend to be able to prove that there is no God. I equally cannot prove that Satan is a fiction. The Christian God may exist".

— Dr. Bertrand Russel, What I believe.

8 "A little consideration of what takes place around us every day would show us that a higher law than that of our will, regulates events; that our painful labours are very

**வால்ட்டேர் :**

பிரஞ்சுப்புரட்சி தோன்றுவதற்கு வித்திட்டுவைத்த பேரறிஞராகிய வால்ட்டேர், தொடக்கத்திற் சமய எதிர்ப்பாளராக இருந்துவந்தாராயினும், நாளடைவில் கடவுளுணர்ச்சியுடையவராக மாறிநின்றார். 9 "கடவுள் என்பவர் இல்லாவிட்டாலும், அவரை உண்டாக்குவது இன்றியமையாததாகும்" எனத் தம் நூலொன்றில் அவர் எழுதுகின்றார். "கடவுளைத் தொழுது என் பகைவர்களை வெறுக்காமலும், குருட்டு நம்பிக்கைகளை அருவருத்துக்கொண்டும், நான் இறக்கின்றேன். (ஒப்பம்) வால்ட்டேர். பிப்ரவரி 28. 1778" என்னும் அறிக்கையைத் தம் செயலரிடம் எழுதி அளித்துவிட்டு, அவர் உயிர்நீத்தார் 10

**முடிவுரை :**

இன்னோரன்ன சுவைமிகு செய்திகள் பலவும், "தெய்வம் என்பதோர் சித்தம்" நம்மனோர்க்கு எத்துணை இன்றியமையாதது என்பதனை விளக்கவல்லனவாம். நாம் அனைவரும் தெய்வ வழிபாட்டுணர்ச்சியுடைய சீலர்களாய்த் திகழ்ந்து, நலம் பெற்றுய்ய இறைவன் திருவருள் துணை செய்வதாக !

---

unnecessary and altogether friutless; that only in our easy, simple spontaneous action are we strong, and by contenting, ourselves with OBEDIENCE we become divine. Belief and love will releive us of a vast load of care. O! my brothers! God exists.

There is a soul at the centre of nature and over the will of every man, so that none of us can wrong the universe. It has so infused its strong enchantment into nature that we proper when we accept its advice: and when we struggle to wound its creatures, our hands are glued to our sides or they beat our own breasts. The whole course of things goes to teach us faith". — Ralph Waldo Emerson.

9 "If God did not exist, it would be necessary to invent him".

10 "I die adoring God, loving my friends not hating my enemies and detesting superstition. (Signed) Voltaire. February, 28, 1778". — Prof. Will Durant,
The Story of Philosophy.

# செய்திகள்

## திருபுவனம் தேவஸ்தானத்தில்
## ஸ்ரீ சரபேசுவரர் உற்சவமும், ஏகதின லக்ஷார்ச்சனையும்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் திருக்கோயிலில் எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ சரபேசுவரருக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் 30—3—7' ஞாயிறு அன்று சிறப்புத் திருவிழா நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீ சரபேசுவரருக்கு ஏகதின லக்ஷார்ச்சனையும் சிறப்பாக நிகழ்ந்தன

ஸ்ரீகம்பகரேசுவரசுவாமிக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீதர்ம சம்வர்த்தனி அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன. இரவு வெள்ளிரதத்தில் ஸ்ரீ சரபேசுவரர் திருவீதி உலா விசேஷ மேளவாத்தியங்களுடன் இனிது நிகழ்ந்தது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடியற்றி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கியருளினர்கள்.

ஸ்ரீ சரபமூர்த்திக்கு 2—9—73 முதல் தொடங்கி நடைபெற்று வரும் கோடியருச்சனையில் இன்றுவரை பதினேழு லக்ஷத்திற்கு மேல் அர்ச்சனை ஆகியுள்ளது குறிப்பிடத்தக்கது. அன்பர்கள் திருபுவனம் திருக்கோயில் பொருளாளருக்கு ரூ. 10 கட்டணம் செலுத்தி, கோடியர்ச்சனையில் பங்குகொள்ளலாம்.

## திருத்தேர் வெள்ளோட்ட விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் தேவஸ்தானத்திற்குத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்வண்ணம் பெரும் பொருட்செலவில் மகாரதம் என்னும் திருத்தேர் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் செய்யப்பெற்று 16—3—75 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் வெள்ளோட்டம் நிகழ்த்தப்பெற்றது. ரத சம்புரோக்ஷணம் செய்யப்பெற்றுக் கருக்கோலக் காட்சியுடன் கிராமப் பிரதக்ஷிணம் செய்விக்கப்பெற்றது. அன்று ஸ்ரீ சரபமூர்த்திக்கும் சுவாமி அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் நிகழ்வுற்றன.

## உருத்திரபாதத் திருநாள்

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருபுவனம் ஸ்ரீகம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 18—3—75 செவ்வாய்க்கிழமை தொடங்கிப் பத்து நாட்கள் உருத்திரபாதத் திருநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. ஒன்பதாம் திருநாளன்று இத்திருக்கோயிலுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணைப்படிப் புதிதாகச் செய்யப்பெற்ற திருத்தேரில் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாள் உடனுகிய ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருவீதிக்கு எழுந்தருளி அருட்காட்சி வழங்கிய நிகழ்ச்சி குறிப்பிடற்குரியது.

20—3—75 தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி சோழர் திருப்பணிபற்றிப் பேசினுர். 21—3—75 தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர் வித்துவான், திரு. வி சபேசன் திருநீலகண்டர்பற்றி விரிவுரையாற்றினுர். 22—3—75 திருமுறை விழா – தேவார வகுப்பு ஆண்டு விழா நடைபெற்றது. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திரு. கு. சுந்தரமூர்த்தி எம் ஏ., திருநாவுக்கரசர்பற்றி உரையாற்றினுர். 23—3—75 திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. சுவர்ணகாளீசுவரன் சேரமான்பெருமாள் நாயனுர் பற்றி உரை நிகழ்த்தினுர்.

## திருவையாறு திருக்கோயிலில்

## நந்தியெம்பெருமான் திருக்கல்யாண விழா

சிலாத முனிவரின் புதல்வராய் இத்தலத்தில் அவதரித்து, தவமியற்றிய நந்திதேவருக்கு இறைவன் கங்கைநீர் முதலிய ஐந்துவகைநீராலும் அபிஷேகம்பண்ணிவைத்து, தீக்ஷைசெய்து திருமழபாடிக்கு எழுந்தருளி வசிஷ்ட மகரிஷியின் மகள் சுயசாம்பிகையைத் திருமணம் செய்வித்தருளிப் பஞ்சபூதப் பிரதக்ஷிணமாகத் திருவையாற்றுக்குவரும் திருவிழா 22—3—75 சனிக்கிழமை தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருவையாறு தேவஸ்தானத்தில் சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் பலரும் வந்திருந்து நந்தியெம்பெருமான் திருக்கல்யாணப் பெருவிழாவைத் தரிசித்து இன்புற்றனர்.

## பேரளம் திருக்கோயிலில் உருத்திரபாதத் திருநாள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ பவானி அம்பாள் உடனுறைய ஸ்ரீ சுயம்புநாத சுவாமி திருக்கோயிலில் 27—3—75 வியாழக்கிழமை பங்குனி உத்திரத்தன்று உருத்திர பாதத் தீர்த்தத் திருநாள் இனிது நிகழ்வுற்றது.

காலை 8 மணிக்குப் பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. பகல் 12 மணிக்கு அக்கினி புஷ்கரணி தீர்த்தத்தில் உருத்திரபாத தீர்த்தம் கொடுத்தருளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதிஉலா நடைபெற்றது. மாலை 6 மணி அளவில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர், திரு. இரா. செல்வக் கணபதி பி.ஏ., அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்கள் பலரும் கேட்டு மகிழ்வுற் றனர்.

## வேளூர்த் திருக்கோயிலில் பிரமோற்சவம்

தருமையாதீனத்திற்குச்சொந்தமான வேளூர் தேவஸ்தானத் தில் ஸ்ரீ வாலாம்பிகை உடனுறைய ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்குப் பங்குனித்திங்கள் பெருவிழா 18—3—75 செவ்வாய் தொடங்கிப் பத்துநாட்கள் சிறப்பாக நடைபெற்றது. நாடோறும் காலை மாலை இருவேளைகளிலும் தேவார பாராயணத்துடன் திருவீதி உலா நிகழ்ந்தது.

19—3—75 தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் மெய்ப்பொருள் நாயனர் பற்றிப் பேசினர். 30—3—75 தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், திருமதி. ப. நீலா காரைக்கால் அம்மையார் பற்றி உரையாற்றி னர். 21—3—75 திருமுறை விதி உலாவுடன் திருமுறை விழா தேவார வகுப்பு ஆண்டு விழா நடைபெற்றது. அண்ணமலைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர், மகா வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் திருஞானசம்பந்தர் பற்றிப் பேசினர். 22—3—75 மாயூரம் அ. வ. அ. கல்லூரி விரிவுரையாளர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி. அவர்கள் சிறுத் தொண்டர் பற்றிப் பேசினர்.

## திருக்குவளைத் திருக்கோயிலில் நெல் மகோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை தேவஸ்தானத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்க்கிழார் தந்த நெல் மலையை சுவாமிகள் ஆரூருக்கு அட்டித்தருமாறு வேண்டிக்கொண்டபடி இறைவன் ஆணையால் பூதங்கள் எடுத்துச்சென்றது முதலிய நிகழ்ச்சிகள் பக்த உற்சவமாக 6—3—75 முதல் 8—3—75 முடிய சிறப்பாக நடைபெற்றது.

7—3—75 திருவாரூர் உயர்பள்ளித்தமிழாசிரியர், வித்துவான் திரு. மு. சுந்தரராசன் "சம்பந்தனும் கோளிலியும்" பற்றியும், 8—3—75 திருவாரூர் வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் "சப்தவிடங்கத்தலங்கள்" பற்றியும் உரையாற்றினர். திருவாரூர் திரு. சாம்பசிவ முதலியார் பி. ஏ., பி. டி., அவர்களின் இன்னிசைச் சொற்பொழிவு நடைபெற்றது.

## குத்தாலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம்

## மகாசிவராத்திரி தல யாத்திரை

குத்தாலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழக அன்பர்கள் 11—3—75 சிவராத்திரியன்று தனிப் பேருந்து மூலம் புறப்பட்டு, திருவாவடுதுறை, சூரியனார்கோயில், திருவிடைமருதூர், திருவாய்ப்பாடி, சுவாமிமலை, திருவலஞ்சுழி, ஆலங்குடி, திருவாரூர், சீகாழி, சிதம்பரம், திருவைகாவூர், திருப்பட்டீசுவரம் ஆகிய தலங்களுக்குச் சென்று தரிசித்தனர்.

## சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

## மாலைநேரத் தமிழ்க் கல்லூரி ஆண்டு விழா

இருபது ஆண்டுகளாக இந்நிலையத்தில் மாலை நேரத்தில் சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் தேர்வுப் பாட வகுப்பு இலவசமாக நடத்தப்பெற்று வருகிறது. இதன் ஆண்டு விழா 16-2-75 அன்று சென்னை திருக்கோயில் ஆசிரியர், தருமையாதீனத்தமிழ்ப் புலவர், திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீனத் தமிழ்ப்பணியைப் பாராட்டி உரையாற்றினர். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியைத் தெரிவித்து உரை நிகழ்த்தினார்கள்.

## மழை வேண்டித் திருமுறைப் பாராயணம்

சென்னையில் ஏற்பட்டுள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு நீங்கி மக்கள் நீர்வளம் பெற்று மகிழ மழைவேண்டித் திருமுறைப் பாராயண விழா 23—3—75 காலை 9 மணி முதல் தொடங்கி நடைபெற்றது. வித்துவான். ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளின் வரவேற்புரைக்குப்பின் ஒய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு. R. சதாசிவம் அவர்கள் விழாத் தொடக்க வுரையாற்றினர்கள். மழைவேண்டல் பதிகப் பதிப்பை வெளியிட்டு உயர்நீதிமன்றநீதிபதி மாண்புமிகு திரு. P S கைலாசம் அவர்கள் பேசினர்கள். ஓதுவாமூர்த்திகள் பலரும் மழை வேட்டல் பதிகங்களைப் பாராயணம் செய்தனர்.

## நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள்

4—2—75 திருநீலகண்ட நாயனர், 12—2—75 அப்பூதி அடிகள், 28—2—75 எறிபத்த நாயனர், 7—3—75 காரி நாயனர், 11—3—75 கோச்செங்கட்சோழ நாயனர், 19—3—75 நேச நாயனர், 21—3—75 கணநாத நாயனர், 23—3—75 முனையடுவார் நாயனர், 29—3—75 காரைக்கால் அம்மையார் முதலியோர் குருபூஜை விழாக்கள் நடைபெற்றன. குருபூஜை விழாவின் போது சைவப்புலவர், திரு. மு. ந. மாசிலாமணியார் பெரிய புராணம் வாசித்து, விரிவுரை ஆற்றியபின் அன்பர்களுக்கும் குழந்தைகட்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## திருவாசக வகுப்புகள்

திங்கள், வெள்ளிதோறும் 10—2—75, 14—2—75, 17—2—75, 28—2—75 ஆகிய தேதிகளில் திருவாசக வகுப்பு தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஒ. எல்., அவர்களால் நடத்தப்பட்டது. இப்போது திருவம்மானைப்பகுதி நடைபெற்றுவருகிறது.

3, 7, 10, 14, 17, 21, 24, 28, 31—3—75 ஆகிய தேதிகளில் திருவாசக வகுப்புகள் நடத்தப்பட்டு இப்பொழுது திருக்கோத்தும்பி பகுதி நடைபெறுகிறது.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

20—2—75 வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா திரு K. வைத்தியநாதன் M. A., (Econ). M. A. (Pol). B. L., I. T. O., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 19—3—75 இல் திரு. அண்ணா. சுப்பிரமணிய அய்யர் B. A., L. T., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. சு. ஞானப்பிரகாசம் வேளூர்த் திருப்பதிகங்கள், திருப்புகழ் முதலியவைகளைப் பாராயணம் செய்தார். பாராயணத்திற்குப்பின் பிரசாதங்கள் அன்பர்கட்கு வழங்கப்பட்டன.

## மாதாந்திர வழிபாடுகள்

நிலைய 1975 பிப்பிரவரி மாத வழிபாடு ஸ்ரீ இரத்தினகிரியிலுள்ள அருள்திருபாலமுருகன் திருக்கோயிலில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தருமபுரம் திரு. P, சுவாமிநாதன், நிலையத் திருமுறை ஆசிரியர் திரு. சு. ஞானப்பிரகாசம் இருவரும் திருப்புகழ், முருகன் நாமாவளிகளைப் பாராயணம் செய்தனர். நிலைய அன்பர்கள் சார்பில் ரூ. 100. திட்டத்தில் அபிஷேக ஆராதனைகள் நடந்தேறின. பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் தொடங்கிற்று. திரு. V. S. கந்தசாமி I. T. O. அவர்கள் முருகன் பெருமையைப் பேசினார். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான்சுவாமிகள் இறைவழிபாட்டின் இன்றியமையாமையைப் பற்றிக் கூறினார்கள்.

30—3—75 மாதாந்திர வழிபாடு சென்னை நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகிலாண்டேசுவரி உடனாகிய ஸ்ரீ அகத்தீசுவரர் ஆலயத்தில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு. சு. ஞானப்பிரகாசம், திரு. N. இராமலிங்கம், திரு. N, இராமமூர்த்திஅய்யர் முதலியோர் சுவாமி சந்நிதியில் திருமுறைப் பாராயணமும், அம்பாள் சந்நிதியில் அபிராமி அந்தாதிப் பாராயணமும் செய்தனர். அபிஷேக ஆராதனைகள் இரவு 7-30 மணிக்கு முடிந்தது. பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திருமுருக. கிருபானந்த வாரியார் சீடர் திரு. திருப்புகழ்ராஜா என்பவர் முருகன் பெருமையைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினார். வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களைப்பற்றிப் பேசினார்கள்.

( 202 ஆம் பக்கத் தொடர்ச்சி )

இயற்றிய திருவாசகம் திருக்கோவையார் இரண்டையும் திருச்சிற்றம்பலம் உடைய பிரானே எழுந்தருளி எழுதி கைச்சாத்திட்டனன் எனில் வேறு சொல்ல என்ன இருக்கின்றது ?

திருவாசகத்தின் பல பகுதிகள் தில்லையில் பாடப்பெற்றவை. இதனாலேயே "தில்லைபாதி திருவாசகத்தில்" என்ற பழமொழியும் ஏற்பட்டது.

திருக்கோவையார் முழுவதும் தில்லைவனத்துள் ஆடும் பெருமானின் புகழ் பேசுகின்றது. மணிவாசகர் தில்லையை மனமாரப் புகழுகின்றார்.

திருவிசைப்பாவில் திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோரும், சேந்தனாரும் பாடிய பதினைந்து திருப்பதிகங்கள் தில்லைவனம் பற்றியவை. பொன்வண்ணத்தந்தாதி, கோயில் நான்மணிமாலை, கோயில் திருப்பண்ணியார் விருத்தம் ஆகியவை பதினொன்றாம் திருமுறையில் உள்ள சிறு பிரபந்தங்கள்.

சாத்திர நெறியில் நடராஜப் பெருமானின் திருஉருவத்தை இருபத்தைந்து மாகேசுவரர்களில் ஒருவராகிய "சபாபதி" என்பர் சான்றோர். அன்றியும் அதிகாரசிவமாகிய மாகேசுர மூர்த்தங்களும், அப்பாற்பட்ட போகசிவமாகிய "சதாசிவமூர்த்தம்" என்று கூறுவர். அதற்குமேலும் "சதாசிவ மூர்த்திக்கும் மேம்பட்ட போகசிவத்தின் மேலானது" என்று உரைப்பர் சமயச் சான்றோர்.

நடராஜப்பெருமான் அருளாடலில் ஐந்தெழுத்து விளங்குகின்றது. திருவடி நகரம். உதரம் மகரம். தோள் சிகரம். முகம் வகரம். முடி யகரம் ஆக ஐந்தெழுத்து அமைப்பு காணலாம். இதனை "ஊன நடனம்" என்பர். துடி சிகரம். வீசுகரம் வகரம். அபயகரம் யகரம். அக்கினி நகரம்ஊன்றிய அடிக்கீழ் மகரம் ஆக ஐந்தெழுத்து விளக்கம் "ஞான நடனம்" என்பர்.

இறைவனது தாண்டவம் ஏழுவகை என்றும், ஒன்பதுவகை என்றும் நூல்கள் கூறுகின்றன. காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர

தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் என்பன ஏழுவகை. நடராஜப்பெருமான் ஆடுவது ஆனந்த தாண்டவம். இதைப் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் என்றும் கூறுவர். சிதம்பர மும்மணிக்கோவையில் குமரகுருபர சுவாமிகள் ஐந்தொழில் அருமையை அழகாக விளக்கியுள்ளார். துடி படைத்தல், அமைக்கும் கரத்தில் காத்தல், அக்கினியிலே அழித்தல், ஊன்றிய பாதத்தில் மறைத்தல், எடுத்த பொற் பாதத்தில் அருளல். தில்லையில் ஐந்து சபைகள் உள்ளன. பேரம்பலம் - தேவசபை சிற்றம்பலம் - நடராஜப் பெருமான் திரு நடனம் புரிந்தருளுமிடம். கனகசபை - பெருமான் அபிடேகம் கொண்டருளும் இடம். நிருத்தசபை - பெருமான் ஊர்த்துவ தாண்டவம்புரிந்தருளுவது இராஜசபை - ஆயிரக்கால் மண்டபம்.

சிவகங்கை சிறப்பான தீர்த்தம். மற்றும் பல தீர்த்தங்கள் உள்ளன.

வியாக்ரபாதர், பதஞ்சலியார் என்றபக்தர்களுக்கு இறைவன் திருநடனம் காட்டி அருளிய தலம் தில்லை. மாணிக்கவாசகப் பெருமான் ஊமைப் பெண்ணைப் பேசவைத்து, புத்தரை வாதில் வென்ற இடம் தில்லை.

சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தைப் பாடி ஆயிரக்கால் மண்டபத்தில் அநபாயன் என்ற சிவபாத சேகரன் பாராட்ட அரங்கேற்றினர். இறைவன் "உலகெலாம்" என்று அடி எடுத்துக்கொடுத்த அமரகாவியம் இது. திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங்களாக கண்டு வழிபட்ட இடம் தில்லை. சுந்தரர் இறைவன் அருளாடலைக் கண்டார். அப்பர் அடிகளை "என்று வந்தாய்?" என்ற குறிப்புடன் ஆட வல்லான் அழைத்து அருளினன் தில்லையில். நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைக் கண்டது இங்கேயே.

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் தரிசனம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தை நிறுவிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் தில்லைவனம் போந்து நடராஜப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் வழிபட்டு ஆயிரக்கால் மண்டபத்தில் தியான நிலையில் இருந்தார்கள். அப்போது இரவில் தன் அருட் குழந்தைக்கு அயரா அன்புடன் சிவகாமியம்மை பாற் சோறும், பால் பாயஸமும் கொண்டுவந்து உண்பித்து பெருங் கருணை செய்தாள். திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டார்.

குருஞானசம்பந்தர் ஞானப்பால் பாயஸம் உண்டார். அதனாலே சிவஞானம் பெற்றுச் "சிவபோகசாரம்" என்னும் நூலை இயற்றினர். இது சாத்திரக் கருவூலம்.

தருமையாதீனம் நான்காவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடத்து குமரகுருபரர் வந்தபோது குருமூர்த்தி சீடர்களுக்குப் பெரியபுராணம் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். "ஐந்துபேரறிவும் கண்களேகொள்ள" என்ற பெரியபுராணத்திருப்பாட்டிற்குப்பொருள்விளக்கம் கூறும் நேரம். அப்பாடலின் அனுபவப்பொருள் யாதெனக் குமரகுருபரரைக் கேட்டார். குருமூர்த்திகள் சுந்தரர் தில்லைக்கூத்தனை வழிபட்ட ஆனந்த நிலையைக் கூறுவதன்றோ இத்திருப்பாட்டு. குமரகுருபரர் வாக்குத் தடைப்பட்டது. திருவருள் உணர்ந்தனர். ஞானதேசிகர் நற்றுள்தொழுது தம்மைச்சீடராக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினர். குருநாதர் காசியாத்திரை சென்றுவருமாறு பணித்தார்கள். காசிசென்று வரும்வரை எவ்வாறு ஆற்றுவேன் என்றார் குமரகுருபரர். குருமூர்த்திகள் சிதம்பரதரிசனம் செய்து வருக என்று ஆணையிட்டார். அவ்வாறே சிதம்பர தரிசனம் செய்து சிலநாள் தங்கிப் பிரபந்தங்கள் பாடி மீண்டும் வந்து சீடராயினர். குருநாதர்மேல் "பண்டார மும்மணிக்கோவை" என்னும் பாமாலை புனைந்து வணங்கினர். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தருமையாதீன அடியவர். குமரகுருபர சுவாமிகளுடன் கல்வி பயின்றவர். வடசொற்கலையும் தென்சொற்கடலும் நிலைகண்ட பெரியார். ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்த சாத்திரப் பெருநூலாகிய "முத்திநிச்சயம்" உரையும், "ஞானவரண விளக்கமும்" தந்தருளியவர். இப்பெருந்தகை பலகாலம் தில்லைவனத்திலே வாழ்ந்து தமிழ்ப் பணியும் சைவப் பணியும் தழைக்கச்செய்து இறைவனடி சேர்ந்தார். இவர் சமாதி கனகசபைநகரில் ஞானப்பிரகாசர் திருக்குளத்திற்கு தென் மேற்குக் கரையில் உள்ளது.

தருமையாதீனத்தின் அடியவராக விளங்கியவரே படிக்காசுத் தம்பிரான் அவர்கள். சிறந்த புலவர். தில்லைப்பிரானிடத்தில் போன்பு பூண்டவர். இவரது ஆற்றலை விளக்க இறைவன் ஒரு விளையாட்டு நிகழ்த்தினன். ஒருநாள் நடராஜப்பெருமான் திருமுன்னிருந்த திரைச்சீலை தீப்பற்றியதை அருள் நோக்கால் உணர்ந்து இவ்வடியவர் தருமைத் திருமடத்திலே தம்கைகளைப் பிசைந்து அவித்தார்! தீ அங்கும் அணைந்தது. தீக்ஷிதர் தோன்றி "நம் திரைச்சீலையில் பற்றிய தீயைப்படிக்காசன் அவித்தான்" என்று இறைவன் அறிவுறுத்தினன். திருநீற்றுக்கிழி

ஒன்று அருளி சென்று கொடுக்க என்று அருளினன். தீக்ஷிதரும் தருமைவந்து அதைச் சேர்ப்பித்தார் என்று தருமை வரலாறு கூறுகின்றது.

தருமையாதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் "சிதம்பரநாதர் பதிகம்" பாடி வழிபட்டார்கள். இதைச் "சிதம்பர நடேசர் திருவருட்பா" என்றும் கூறுகின்றார்கள்.

தருமையாதீனம் இருபத்தைந்தாவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்களுக்கு தில்லை நடராஜர்பால் பக்தியும் அன்பும் உண்டு. அவர்கள் சிதம்பரத்தில் அவதரித்தவர்கள் சமயம் ஏற்படும்போது எல்லாம் தில்லைக்கு எழுந்தருளுவார்கள். ஆனந்தக் கூத்தனுக்கு லட்டு பாவாடையிட்டு, பொன்னுடை அணிவித்துப் போற்றி வழிபடுவார்கள். அன்பர்களாகிய எங்களையும் உடன் அழைத்துச்செல்வார்கள். தில்லையில் தீக்ஷிதர்கட்கு அன்னதானம் நடைபெற வழிசெய்துள்ளார்கள்.

அதுபோலவே தற்போது தருமையில் வீற்றிருக்கும் இருபத்தாறுவது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தில்லைக் கூத்தனிடம் பக்திபூண்டவர்கள். சித்திரைமாதம் ஆயில்யத்திருநாளில் அங்கு எழுந்தருளி தேவாரப்பெற்றதிருத்தலங்களில் மாதாந்தர வழிபாடு ஆரம்பிக்கத் திருஉளம்கொண்டுள்ளார்கள். அவர்கள் அவதரித்ததிருநாள்சித்திரை ஆயில்யம் இவ்வாண்டு ஆண்டவன் திருவருளால் ஸ்ரீராமநவமியும், ஆயில்யத்திருநக்ஷத்திரமும் ஒரே நாளில் வருகின்றன. அன்று தில்லையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் (20—4—1975) சிறப்பு வழிபாடு நடத்துகிறார்கள்.

(இக்கட்டுரை தருமையாதீனம் வெளியிடான "தில்லை வனம்" என்ற நூலை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.)

# எதிர்காலம்

**ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்**

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**( ஸ்ரீ இராக்ஷஸஸ்ரீ சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய )**

**( 14—4—75 முதல் 14—5—75 முடிய )**

| | | | |
|---|---|---|---|
| குரு | சூ<br>பு சந் | கே சுக் | சனி |
| செ<br>ல | இராசி | | |
| | 15உ ரிஷ பு<br>22" மிது சு<br>29உ மீன செ | | |
| | ரா | | |

| | | | |
|---|---|---|---|
| கே | சூ | பு | |
| சனி<br>சுக் | அம்சம் | | |
| | | | |
| செ | சந் | குரு | ல<br>ரா |

ஸ்ரீ இராக்ஷஸஸ்ரீ சித்திரைமீ முதல்தேதி முதல் 31உ முடிய உள்ள மேட மாதத்தின் முதல் தேதி பகல் சைத்திர விஷு புண்ணிய காலமாகும் ஸ்ரீ ஆனந்த ஸ்ரீ பங்குனி மீ 30உ பானு வாரம் பரணி நக்ஷத்திரத்தில், தைதுலே கரணத்தில், உலக சுபிட்சத்தை முன்னிட்டு ஸ்ரீ லோகாட்சகரான சூரிய பகவான் உதயம் முதல் 54 நாழிகை 53 விநாடிக்கு, கும்ப லக்கினத்தில் கலியுகம் 5076 ராக்ஷஸ ஸ்ரீ சித்திரை மாதப் பிரவேசம் செய்கிறார். அதன் பலன் உலகமெல்லாம் நிகழ்கின்ற அதர்மச் செயல்கள் நீங்கவும், உலகத்திலுள்ள பெரும் வல்லரசுகள், ஜனப் பிரதிநிதிகளுக்குள் ஏற்படுகின்ற யுத்தங்கள், கலகங்கள் நீங்கவும் தெய்வானுக்கிரகம் ஏற்படும். தூமகேது போன்ற தீக்கோள்கள் வானத்தில் தோன்றுவதால் ஏற்படுகின்ற வறட்சி

நிலைமை, பிரஜைகளுக்கு நேருகின்ற பாபங்கள் எல்லாம் நீங்க நிவாரணங்களும் பரிகாராதிகளும் ஏற்பட்டு உலகம் உய்யும். உலகப் பொது நல ஸ்தாபனங்கள் செயல்படும். உலகெல்லாம் ஏற்பட்டுள்ள அறங்காவல் ஸ்தாபனங்கள், திருமடங்கள், தேவாலயங்களில் தர்ம புண்ணிய சீலர்களின் புண்ணிய காரியங்களும், தேவாலய உற்சவங்களும் சிறப்பாக நடைபெறும். ஆஸ்திகம் பரவி எங்கும் பிரஜைகள் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷ ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2, 7 க்குரிய சுக்கிரன் நிலையால் குடும்ப நலம் சிறப்பாக இருக்கும். பணவசதியும், சுக சௌகரியங்களும் மனமகிழ்ச்சியளிக்கும் 3, 6 க்குரிய புதன் இம்மாதம் 15உ வரையில் சுக்கிரன் பலத்தாலும் அதன்மேல் சுயபலத்திலும் விளங்குவதால் ஒப்பந்த லேவாதேவிகள் கல்வித்துறை எழுத்து மூலிய தொழில்கள் முதலியவை சிறப்புறும். அரசாங்க மூலம் சகோதரர்களுக்கு ஓர் நல்ல உயர்வு ஏற்படும். இருணங்கள் தீர்ந்தும் சத்துரு மித்திரமாவதும் ஏற்படினும் மனம் சலிப்புடன் கூடிய புன்முறுவலாக இருக்கும். உடல் உஷ்ணதிக்கமாக இருக்கும். இராசகாரிய லிகிதங்களில் அவசரமேற்படும். யந்திரம் வாகனங்களில் புதிய மாற்றத்தை உண்டுபண்ணும். இம்மாதம் 18உ க்கு மேல் குரு சுய நவாம்சையில் வருவதால் பிதா அல்லது குருமார்களுக்கு கடமை நிறைவேற்றும் பாக்கியம் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறந்து விளங்கும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

( இ. உ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மத்திம பலனாக இருக்கும். 2ல் சனியும் 2ஆம் அதிபதி மத்திம பலனாகவும் இருப்பதால் தனவசதி சீராக இருக்கும். வாக்கு திட்டவட்டமான தாகவும் பிறர் மறுக்க முடியாமலும் இருக்கும். தொழிலனுபவ மேன்மையை உண்டுபண்ணும். குருவின் நிலைமையால் சகோதரர் நலன் சிறப்பானதாகும். 4 க்குரிய சூரியன் நிலையால் வீடு வாகனங்களில் முதலீடு ஆகும். அரசாங்கவனுகூலாதிகளுக்கு முயற்சியும், காலதாமதமும், தடங்கல்களுமாக இருக்கும். புத்திரர்களின் கல்வி, கலை. தொழில் துறை முன்னேற்றம் சிறந்து விளங்கும். கணவன் மனைவியின் வாழ்க்கை மகிழ்ச்சி பொருந்தியதாக இருக்கும். தெய்வ புண்ணிய காரியங்கள் நடைபெறும். தீர்த்தயாத்திராதிகள் நேரும். நூதன பொருள் பிராப்தியும்

மனமகிழ்ச்சியும் ஏற்படும். இருணங்கள் தீர்தல். சத்துரு மித்துரு வாகுதல், சகல ஜனவாதரவு முதலிய சகாயாதிகள் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் ஸ்திர நிலைமையாக இருந்து வரும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச. – கே. கோ. ஹ )

மிதுன ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனவசதி பெருகும். 3, 4 க்குரிய சூரியன் புதன் நிலையால் சகோதரர் பந்து மித்திரர்களினுல் பொருளாதார முன்னேற்ற வழிதுறைகள் ஏற்படும். அரசாங்கத்தில் நல்ல செல்வாக்கும், கல்வி எழுத்துத் துறைகளில் ஆதாய பிராப்தியும் ஏற்படும். குரு செவ்வாய் நிலைமையால் குருவிற்கு விபரீத வேதை என்கிற நற்பல ஆதிக்கம் ஏற்பட்டு இருணங்கள் சத்துருத்துவம் நீங்கும். பூ பாக்கியத்தையும், சிவந்த பொன்மணிகள் பிராப்தியையும், புன்செய் தானிய அபிவிருத்தி முயற்சியில் நற்பலனையும் அளித்துவரும். சுக்கிரன் நிலையால் புத்திரர் புத்திரிகளின் நலன் குறித்தும் சுப விசேஷாதிகளிலும் செலவை ஏற்படுத்தும். இம்மாதம் 18வ க்கு மேல் குரு தன் சுய அம்சகம் அடைவதால் எவ்வித சுப காரிய முயற்சியும் சிரமம்போல் தோன்றி பின் ஜெயமடையும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் புதியதொரு ஏற்பாடும் பிரசித்தமும் ஏற்படும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
( ஹி. – ஹு. ஹெ. ஹே. ட. – டி. டு. டெ. டொ. )

கடக ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம் மாதம் சுப பலனைக் கொடுக்கும். 2க்குரிய சூரியன் புதன் சேர்க்கையால் தன தானிய வசதி சிறப்பாக இருக்கும். வித்துவ கீத உல்லாச அனுபவங்கள் ஏற்படும். சகோதரர் குடும்பம் சிறந்த விளங்கும். பந்துக்கள் சகாக்கள் கட்டுப்பாடுடனும் விசுவாசமுடனும் நடந்துகொள்வர். 4 க்குரிய சுக்கிரன் நற்பலஸ்தானத்தில் இருப்பதால் சுக சௌகரியம், வாகன சௌகரியம், கால்நடை வாகன விருத்தி முதலியன ஏற்படும். புதிய கட்டட நிறுவனத்தை ஏற்படுத்தும். கல்வி கலைகளில் விருப்பமும், விஞ்ஞானத்துறை அல்லது ஞானக் கேள்விகளில் ரசிப்பையும் ஏற்படுத்தும். தொல்பொருள் சம்பந்த ஆராய்ச்சியும் வியாக்கியான சம்பவங்களும் நேரும் 5க்குரிய செவ்வாய் நிலையால், ஓர் விபத்து வந்து நீங்கும். காரியங்களை உறுதிபடுத்துவதும் அரிய காரிய சித்தியையும் உண்டு பண்ணும், கணவன் மனைவியின் வாழ்க்கை

சாதாரணமாக இருந்து வரும். புத்திரர்களுக்கு வாந்தி மாந்தம் போன்ற பிணிகள் கண்டு விலகும். சத்துருக்கள் சமாதானத்துக்கு வருவர். செய்தொழில் அல்லது உத்தியோகம் கண்யம் பொருந்தியதாக இருந்து வரும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே. )

சிம்ம ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம் மாதம் சாதாரண பலனாக நடக்கும். 2க்குரிய புதன் 9ல் இருந்து தன் நற்பலஸ்தானத்தில் வேறு கிரகம் இருப்பதால் தனம் பொன் மணி மாலைகள் பிராப்தியும் குடும்ப சுபகரமும் திருப்திகரமாக இருந்துவரும். 3க்குரிய சுக்கிரன் நிலையால் சகோதர வகையில் ஓர் சச்சரவான நிலைமையும் மனோவேகப்போக்குமாக இருக்கும் 4க்குரிய செவ்வாய் நிலையால் கணவன் மனைவிக்குள் பிரச்சனை. அல்லது பிணக்குகள் ஏற்படும். மித்திரர்களின் மனத்தாங்கல் இருப்பினும் யதார்த்தம் உடன் சரிக்கட்டும் நிலைமையாகும். 5, 8 க்குரிய குருவின் நற்பல ஸ்தானத்தில் வேறு கிரகம் இருப்பதால் புத்திரர் புத்திரிகளின் நலம் நன்றாகவும் அந்தஸ்து பொருந்தியதாகவும் இருக்கும். தெய்வ தரிசனங்கள் செய்தல், பெரியோர்கள் வேத பிராமணர்களிடம் ஆசீர்வாதம் பெறுதல் முதலான புண்ணிய பலன்கள் கிடைக்கும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் தன்னலமற்று பொதுநலக் குறிக்கோளாக இருக்கும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. பா. பி. – பூ. ஷ ண. ட. – பே. போ

கன்னியா ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம் மாதம் சுப பலனைத் தரும். 2 க்குரிய சுக்கிரன் நற்பலனாக விளங்குவதால் குடும்பாவிருத்தி மேன் மேலும் சிறப்பானதாகவும் பாக்கிய விருத்தியும் மதிப்பும் ஏற்படும். 3 க்குரிய செவ்வாய் பலத்தால் சகோதரர் குடும்பம் பிரசித்தமும், பூமி சொத்து சம்பந்தமாக ஓர் நற்பலனும், சத்துருத்துவம் நீங்கப்பெற்று எவ்விதகாரியமும் சித்தி பெறுவதும் ஆகும். உத்திரம் சித்திரை நக்ஷத்திரங்களுக்கு இம்மாதம் முற்பகுதியில் அஸ்த நக்ஷத்திரத்திற்கு இம்மாதம் பிற்பகுதியில் வீடு வாகனங்களில் அபிவிருத்தியும், கணவன் மனைவியரிடையே சந்துஷ்டியாதிகளும், ஜீவனத் தொழிலில் இருந்த சிரமம் நீங்குதலும், சரீரப்பீடை அயர்வு நீங்கி இலக்ஷிமீகரமான நிலைமையும் ஏற்படும். புதன் சஞ்சாரத்தால் ஜீவனத்தொழிலில் இராசாங்கத்தால் நற் பலன்களை ஏற்படுத்தும். எழுத்து

மூலமான செயல்களில் நன் மதிப்பும் பிரபலஸ்தர் மேலோர் அனுசரணைகளும் ஏற்படும். செய் தொழில் அல்லது உத்தியோகம் திறம்பட நடைபெறும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾
(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலா ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2, 7 க்குரிய செவ்வாய் பலவீனமாக இருப்பதால் தனவசதி சீராக இருக்கும். குடும்பத்தில் சகோதரர், மனைவி புத்திரர்களின் போக்கில் மனோவேக நிலைமையும், பூமி, விவசாயத்தில் மாறுதல்களும், வயிற்றுவலி, தன் ஸ்திரிக்கு கெற்பக்கோளாறு முதலிய சிரமபலன் காட்டி நீக்கும். 3, 6 க்குரிய குரு நிலைமையால் பாகப்பிரிவினைகள் ஏற்படுவதற்கான சூழ்நிலையும் ஒருபுறம் மன சங்கடமும் ஒருபுறம் நிதான போக்குமாக இருந்துவரும். இம்மாதம் 22உ க்குமேல் கணவன் மனைவியின் வாழ்க்கையில் நிம்மதியும், பசு, எருமை பால் பாக்கியம் பெருகுதலும் ஏற்படும். புதன் சஞ்சாரத்தால் எழுத்துத்துறை, ஒப்பந்த லிகிதம், தஸ்தாவேஜுகளில் ஸ்திரமும் அரசாங்க ஆதரவு சட்டதிட்டங்களுக்கு உகந்ததாகவும் இருக்கும். வட்டி, வாடகை குத்தகைப்பணம் சாதாரணமாக வந்து சேரும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் சுமை குறைந்து சாதாரண நிலைமையாக இருக்கும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.
(தோ. – ந. நி. நு. நே. – நோ. யா. யி. யு.)

விருச்சிக ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம் மாதம் சாதாரண பலனாக இருக்கும். 2 க்குரிய குரு மிச்சிரனாக இருப்பதால் தன வசதி சீராக இருக்கும். 3 க்குரிய சனி நிலையால் சகோதரருக்கு ஏற்படும் சிரமத்தால் மனக் கஷ்டமும், 1, 6 க்குரிய செவ்வாய் நிலையால் வீடு வாகனத்தில் சச்சரவான நிலைமையும், இதய வலி, படபடப்பு முதலிய ரத்தாதிக்கமும் காட்டி நீக்கும். புதன் சுக்கிரன் சஞ்சாரத்தால் மனைவி மைந்தர்களின் நலன் திருப்திகரமாக இருந்துவரும். நீர் யந்திர வாகன ஆக்கத்தில் அதிக ஈடுபாடும் ஆதாயமும் உண்டாகும். 10, 11 க்குரிய சூரியன் புதன் சஞ்சாரத்தால் அரசாங்க லிகிதங்களிலும் தொழில் துறைகளிலும் சிறப்பு உண்டாகும். ரோகங்கள் விரைவில் குணமடைதலும், சத்துரு வற்ற நிலைமையும், எடுத்த காரியங்களிலெல்லாம் ஜெயானுகூலங்களும் பிரசித்தமும் ஏற்படும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்பும், கண்யமும் ஏற்படும். காலதேச வர்த்தமானத்தின்படி நவீன நடைமுறையாகவும் இருந்து வரும்.

## 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ. ப. பி. - பூ. த. ப ட. - பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம் மாதம் மிச்சிர பலனாக நடைபெறும் 2, 3 க்குரிய சனி நிலையால் மூலம் உத்திராடத்திற்கு தனவசதி திருப்திகரமாகவும், குடும்பத்தில் ஓர் சுபமும் ஏற்படும். பூராடத்திற்கு தனம் செலாவணிக்கு போதாமலும், குடும்பத்தில் சிரமம் அதிகரித்தும் காணும். சகோதர சகோதரிகளின் குடும்பம் மேலோங்கும். மனம் திடதைரியமாக இருக்கும். குருவுக்கு விபரீதவேதை என்கிற நற்பலன் இம்மாதத்தில் இருப்பதால் வீடு வாகனங்களில் புதிய வசதிகள் ஏற்படுவதாகும். புத்திரர் புத்திரிகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியளிப்பதாகவும், பந்துமித்திரர் அரசாங்க மூலமான சகாயங்களும், வித்துவத்தில் நல்ல மதிப்பும் ஏற்படும். எழுத்துமூலமான காரியங்களில் சாதகமும், சுறுசுறுப்பான போக்குமாக இருந்துவரும். மனைவியின் உடல் நலம் பித்தாதிக்கம் நீர்பாட்டால் சிரமம் காட்டி நீக்கும். பெற்றோருக்கு உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டு குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் அதிகசிரமமின்றி சுலபமாக செயல்படும்.

## 10. மகரம்-உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. - கி. கு. கெ. கொ. - க. கீ


மகரராசி 9 பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2 க்குரிய சனி உத்திராடம், அவிட்டத்திற்கு நற்பல நக்ஷத்திரத்தில் சுபனாக சஞ்சரிப்பதால் தனவசதியும், குடும்பத்தில் ஆக்க முயற்சிகளும், குடும்பத்தினரின் ஒத்துழைப்பும் இருந்துவரும். திருவோணத்திற்கு தனம் வரவும் செலவும் சரிசமமாகவும், குடும்பக் கவலையும் இருந்துவரும். ஓர் தூரப் பயணம் ஏற்படும். 3, 12 க்குரிய குரு ஆட்சிப்பெற்றும், 4, 11 க்குரிய செவ்வாய் 2 லும் இருப்பதால் பூமி, வீடு வாங்குதல் முயற்சியும், உறுதிபாடும், கண்டிப்பான பேச்சுவார்த்தைகளும். சாதக நிலைமையையும் உண்டுபண்ணும். கேந்திரகோணாதிபதிகளாகிய சுக்கிரன் புதன் சஞ்சாரத்தால் சுகசௌகரியங்களும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். வட்டி வாடகைகள் வந்துசேரும். நிரந்தர வருமானம் போதாமல் உபதொழில்களில் தக்க சமயத்தில் பொருள் வந்துசேரும் பந்துமித்திரர்கள் வருகையும், சுப விசேஷங்களும் நடைபெறும். மனைவி வகையினரால் ஸ்திரப் பொருள்களில் சகாயங்களும், பூர்த்தியற்ற நிலைமையும், சிக்கலுமாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சாதாரண நிலைமையாக இருந்துவரும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி–¾
### ( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2 க்குரிய குரு சுப பலனுக இருப்பதால் தனவசதி தாராளமாக இருந்துவரும். குடும்பத்தில் சுபகரம் ஏற்படும். மேலோர் பெரியோர்களிடம் ஆசி பெறுதலும், பிரபு நேசமும் ஏற்படும். 3, 10 க்குரிய செவ்வாய் நிலையால் சகோதர வகை சிரமமும், சரீரத்தில் காயம் படுதலும், இரத்தாதிக்கமும் ஏற்பட்டு உடன் குணமாகும் சூரியன் புதன் நிலைமையால் மனைவி மைந்தர்களின் நலம் நன்ருக இருந்துவரும். பச்சை, சிவப்புக்கற்கள் பதித்த ஆபரணுதிகள் வாங்குதலாகும். எழுத்து, கல்வித்துறையில் அல்லது உத்தியோகத்தில் அரசாங்கத்தால் நன்மை ஏற்படும். தெய்வ ஸ்தல யாத்திரை செய்வதும், சாஸ்திர சம்பிரதாயங்களை கடைபிடித்தலுமாகும். குலப்பெருமை சிறந்து விளங்கும் முன் எதிலும் சிரமம்போல் தோன்றி முடிவில் நற்பலனுகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் புகழ் உண்டாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி
### ( தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி )

மீனராசி 9 பாதங்களும், எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனுக இருக்கும். 2 ல் சூரியன், புதன் 12 ல் இரண்டாம் அதிபதி செவ்வாய் இருப்பதால் தனம் புத்தி சாதுரியத்தால் வந்தாலும் உடன் செலவாகிவிடும். இம்மாதம் 15 உக்குமேல் சத்துருக்களாலும், அரசாங்க நெருக்கடியாலும் தனச்செலவை உண்டுபண்ணும். சந்திர லக்கினத்தை சனீஸ்வரன் பார்ப்பதால் உடலில் பித்தாதிக்கம் ஏற்படும். சுக்கிரன் நிலையால் பசு எருமை பால் கறவையும், வீடு சம்பந்தமான ஆக்க முயற்சியும் உண்டாகும். இம்மாதம் 29 உ செவ்வாய்ப்பெயர்ச்சியின்பிறகு எல்லாவிதமான செல்வ விருத்திகளும், சகோதரர் பந்துக்களின் விசுவாசமும் ஏற்பட்டு மன உவகையளிக்கும். புத்திரர் புத்திரிகளுக்கு சுப காரிய சம்பவங்கள் நிகழும். கணவன் மனைவியின் வாழ்க்கையில் பரஸ்பரம் ஒற்றுமை நிலவும். நீர்யந்திர கருவிகளால் ஆதாய பிராப்தி ஏற்படும். இம்மாதம் 12 உக்குமேல் 18 உக்குள் உறவினரில் ஓர் மனவருத்தசம்பவம் ஆகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இம்மாதம் 29 உ க்குமேல் சிரமத்துக்கு ஏற்ற பலனை உண்டுபண்ணும்.



உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

## ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்

# பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம் இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப்பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீஞானப்பிரகாச தேசிகர் அருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருவதற்குரிய ஞான பிடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து ஜீவசமாதி கூடிய கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு நிகழும் இராக்ஷச ஆண்டு வைகாசித்திங்கள் 7 ஆம் நாள் ( 21—5—75 ) புதன்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் "திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் - சமயப் பயிற்சி வகுப்பும்" நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்
சொக்கநாதத் தம்பிரான்.

தருமையாதீன
மடாலயம்
இராக்ஷச - சித்திரை

# ஆதிபரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் சைவ வேளாளர் மரபில் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோம வார சுப தினத்தில் தோன்றினர். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினர் பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன் சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு மகிழ்ந்தெழுந்தது; ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்றுவந்த நாம், பூஜைப் பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்றோம்; மூழ்கிப் பெறுக, என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத்தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்றனர். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று; "பெருமானே, கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூசிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும் சிவபூஜையும் பெறுக' என்று பணித்தருளி ஞானப்பிரகாசரது கனவிலும் சென்று, 'உன்னிடம் வருகின்ற நம் ஞான

சம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவ பூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக' என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுள் திரு முன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கி யிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினர். அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாதவெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப் பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன், ஆங்கு இல்லாமைகண்டு, ஞான சம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது 'நிற்க' என்று சொல்லி உட்சென்ருர். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது. ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு முன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர், தனி யிடத்தில் இருந்து உம்மைநாடி ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்ருர். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் நன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்பிர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படியாக உரைத்தருளே"

என்று வேண்டினர். அதுகேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்த பரவசர் முதலிய பலர் வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச்செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

உ

## தருமையாதீனத்தில்

## கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பு

# ( திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு )

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத் திருமடத்தில் ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டி 21—5—75 முதல் 30—5—75 முடிய கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பும், திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

சமயப் பயிற்சி வகுப்பு காலை மணி 10 முதல் 12 வரையிலும் மாலை மணி 3-30 முதல் 5-30 வரையிலும் நாள்தோறும் நடைபெறும். சைவ சித்தாந்த சாத்திரங்களும், வேதம், ஆகமம், பத்ததி, புராணம் - இதிகாசம் முதலியவைகளும், திருமுறை முதலிய தோத்திர நூல்களும் அவ்வத் துறையில் சிறப்புமிக்க அறிஞர்களால் வகுப்பு முறையில் நிகழ்த்தப்பெறும். கலந்துகொள்ள விரும்புவோர்க்கு உணவும் உறையுளும் இலவசமாக அளிக்கப்பெறும்.

பள்ளி இறுதி வகுப்புக்குமேல் பயின்ற செகண்டரி ஆசிரியர்கள், புலவர் பட்டம் பெற்றவர்கள், உயர் கல்வி பெற்றவர்கள் இதில் கலந்துகொள்ளலாம். பயிற்சி பெற விரும்புவோர் தங்கள் பெயர், தகுதி, அலுவல்நிலை முதலியன பற்றித் தெளிவாக எழுதுவதோடு கீழ்க்கண்ட முகவரிக்கு 16—5—75 க்குள் விண்ணப்பித்துக்கொள்ளுதல்வேண்டும். இசைவுக் கடிதம் பெற்றபின் அக்கடிதத்துடன் 21—5—75 காலை 7 மணிக்குள் வந்துசேர்தல் வேண்டும். அவரவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் வந்துபோதல் வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்தரவுப்படி,

**வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்.**

தொடர்புக்கு :— மேலாளர், தருமையாதீனம்,
தருமபுரம், மாயூரம் 609001

உ

## 21-5-75 புதன்கிழமை காலை

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்து அருளாசி வழங்குதல்

| நாள் | காலை 10-11 | காலை 11-12 | மாலை மணி 3, 30 — 4. 30 | மாலை மணி 4-30 — 5-30 |
|---|---|---|---|---|
| 21—5—75 புதன் | திரு. க. தண்டபாணி தேசிகர் "உண்மை விளக்கம்—சிவஞானபோதம்" | திரு. கி. அருணைவடிவேல் முதலியார் "திருவுந்தியார்—திருக்களிற்றுப்படியார்" | "சித்தாந்த அஷ்டகம்" ந. ரா முருகவேள் | "புராணங்கள்" கடப்பாக்கம் சாமசந்தரஞ் செட்டியார் |
| 22—5—75 வியாழன் | | | "சேக்கிழார் செந்தமிழ்" ச. தண்டபாணி தேசிகர் | "பழந்தமிழ் நூல்களில் சமய நெறி" பா. நமசிவாயம் |
| 23—5—75 வெள்ளி | | | "மணிவார்த்தை" அருணைவடிவேல்முதலியார் | 'கம்பரும் வில்லியும்" அ. வ, இராசகோபாலன் |
| 24—5—75 சனி | | | "அறுவகைச் சமயம்" க. வச்சிரவேலுமுதலியார் | "பன்னிருதிருமுறைப் பதிப்பும் சிறப்பும்" க. வெள்ளைவாரணம் |
| 25—5—75 ஞாயிறு | | | "அருணந்திதேவரின் அருள் நூல்கள்" சொ. சிங்காரவேலன் | 'மூவர்தமிழ்" தா. ம. வெள்ளைவாரணம் |
| 26—5—75 திங்கள் | | | "பிரபந்தங்கள்" இரா. இராதாகிருஷ்ணன் | "சிவாகமங்கள்" சுவாமிநாத சிவாசாரியார் |
| 27—5—75 செவ்வாய் | | | "வேதம்" கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் | 'ஸ்ரீ திருஞானசம்பந்தர் அருள் நூல்கள்" வி. சா. குருசாமி |
| 28—5—75 புதன் | | | "பத்ததிகள்" ச. தண்டபாணி தேசிகர் | "திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும்" ப நீலா |
| 29—5—75 வியாழன் | | | மந்திரமும் மறைமொழியும் அருணைவடிவேல்முதலியார் | "தேர்வு" |

# திருநாள் விபரம்

| | தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | கிழமை | திரு நாள் | திருநாள் விபரம் |
|---|---|---|---|---|---|
| வைகாசி | 6 | 20—5—75 | செவ்வாய் | | காலை கணபதி ஹோமம். உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் (மாலை மணி 8 to 9) தனுர் லக்னத்தில் அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிர ஹணம் அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். |
| | 7 | 21—5—75 | புதன் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம்கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 9-க்கு மேல் 11-15 க்குள் (காலை மணி 9-45 to 10-30) கடக லக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மஹோத்ஸவத் துவஜா ரோகணம். |
| | 8 | 22—5—75 | வியாழன் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| | 9 | 23—5—75 | வெள்ளி | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி. |
| | 10 | 24—5—75 | சனி | 4 | நந்தி, காமதேனு, குதிரை வாகனக் காட்சி. |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 25—5—75 | ஞாயிறு | 5 | சகோபுர ரிஷபவாகனக் காட்சி. |
| 12 | 26—5—75 | திங்கள் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக் காட்சி. |
| 13 | 27—5—75 | செவ்வாய் | 7 | இரவு மணி 6 - 15 க்குமேல் 8 - க்குள் விருச்சிக லக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம், வெள்ளிரதக் காட்சி. |
| 14 | 28—5—75 | புதன் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| 15 | 29—5—75 | வியாழன் | 9 | விடியற்காலம் மணி 5 to 6 ரிஷப லக்னத்தில் மஹா ரதாரோஹணம்; திருத்தேர். |
| 16 | 30—5—75 | வெள்ளி | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல்; இரவு துவஜாவரோகணம். |
| 17 | 31—5—75 | சனி | | மௌன உற்சவம். |
| 18 | 1—6—75 | ஞாயிறு | | சண்டேசுவரர் உற்சவம். |

இராஜகுரு

உ

குருபாதம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

21—5—75 புதன்கிழமை ] [ மாலை 6-30 மணி

முதல் திருநாள்.

## கருத்தரங்கம்

வரவேற்புரை :

வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை,
வேளூர் தேவஸ்தானம், வைத்தீஸ்வரன்கோயில்.

தொடக்கவுரை :

திரு. ஆர். சதாசிவம் பி. ஏ., எம். எல்.
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

சிறப்புரை :

திருமதி. சௌந்தரம் கைலாசம்
சென்னை.

விரிவுரை :

தருமையாதீனப் புலவர், சித்தாந்தப் புலவர்மணி,
புலவர், திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.,
ஆசிரியர், திருக்கோயில் சென்னை.
"சங்ககாலச் சைவநிலை"

தருமையாதீனப்புலவர், செஞ்சொற்கொண்டல்
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. பி. எச்டி.,
தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.
"இடைக்காலச் சைவநிலை"

கபப்பாக்கம்
திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்
சென்னை.
"பிற்காலச் சைவநிலை"

---

22—5—75 வியாழக்கிழமை ] [ மாலை 6-30 மணி

இரண்டாம் திருநாள்

## வழக்காடு மன்றம்

வரவேற்புரை :

வித்துவான், ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை,
ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு.

பொருள் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆண்டவனைப் பணிகொண்டமை பெருமைக்குரியது அன்று!

வழக்குத் தொடுப்பவர் :
பேராசிரியர்
திரு. பா. நமசிவாயம் எம். ஏ.,
ஆ. பி சீ. அ. கல்லூரி,
திருப்புத்தூர்.

எதிர்வழக்கிடுவோர் :
புலவர்
திரு. கோ. சாரங்கபாணி,
காரைக்கால்.

---

23—5—75 வெள்ளிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

மூன்றும் திருநாள்

## பட்டி மண்டபம்

வரவேற்புரை :

வித்துவான், ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
தருமையாதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

நடுவர் :

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள்
( குன்றக்குடி அடிகளார் )
திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி.

பொருள் :

சேக்கிழார் விரித்த வழிவழி வரலாற்றில்
ஆண்டவன் அடியவர்களைத் தேடி வருகின்றாரா?
அடியவர்கள் ஆண்டவனைத்தேடிச் செல்கின்றனரா?

ஆண்டவன் வருகின்றான் !

புலவர் திரு. க. அறிவொளி எம்.ஏ,
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

திரு கா. ம. கண்ணப்பன்,
தமிழாசிரியர்,
உயர்பள்ளி, தருமபுரம்.

வித்துவான். திருமதி. ப. நீலா பி ஏ.
பேராசிரியை, தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

அடியவர்கள் செல்கின்றார்கள் !

திரு அ. வ. இராசகோபாலன் எம். ஏ.
தமிழ் விரிவுரையாளர், நேரு நினைவுக்கல்லூரி, புத்தனாம்பட்டி,

திரு. ஆ. சோமநாதன் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
பேரவைக் கல்லூரி பூம்புகார்.

புலவர் செல்வி.ரா.மீனாட்சிசுந்தரம்
தமிழாசிரியை, அரசினர் மகளிர் உயர்பள்ளி, மாயூரம்.

24—5—75 சனிக்கிழமை ] [ மாலை 6–30 மணி

## உரையரங்கம்.

வரவேற்புரை :

ஸ்ரீமத். திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை,
ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

சிறப்புரை :

திரு. எஸ். மகாராஜன் பி. ஏ., பி. எல்.. அவர்கள்
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

பொருள் :

" தெளிவுகுருவின் " என்ற திருமந்திரப் பாடல்.

பொருள் விரிப்போர் :

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர், தருமையாதீனப் புலவர்,
திரு. க. வெள்ளை வாரணம் அவர்கள்
துணைப்பேராசிரியர்,
தமிழ் ஆராய்ச்சித்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

" தெளிவு குருவின் திருமேனி காண்டல் "

தருமையாதீனப் புலவர், திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,
திரு. க. வச்சிரவேலு முதலியார் பி. ஏ., எல். டி.,
காஞ்சிபுரம்.

" தெளிவுகுருவின் திருவார்த்தை கேட்டல் "

தருமையாதீனப் புலவர், பண்டித வித்துவான்,
திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,
முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

" தெளிவுகுருவின் திருநாமம் செப்பல் "

தருமையாதீனப் புலவர்.
மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்
திருக்குறள் ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

" தெளிவுகுருவுரு சிந்தித்தல் தானே "

25—5—75 ஞாயிற்றுக்கிழமை ] [ மாலை 6-30 மணி

ஐந்தாம் திருநாள்

## கவியரங்கம்.

வரவேற்புரை :

ஸ்ரீமத். சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை,
ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

பொருள் :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாற்றில்

பங்கேற்போர் :

திரு. அ. கலியபெருமாள் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.
" வில்வாரண்யம் "

திரு. மா. வே. பசுபதி
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.
" குருநாதனைத் தேடி "

திருமுறைச் செம்மல், மதுரகவி
வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணம்
தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.
" உபதேசங்கள் "

தருமையாதீனப் புலவர், செஞ்சொற் கொண்டல்
டாக்டர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. பி. எச்டி
தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி மாயூரம்.
" கண்ணுக்கினிய பொருள் "

---

26—5—75 திங்கட்கிழமை ] [ மாலை 6-30 மணி

ஆறும் திருநாள்

## வழக்காடு மன்றம்.

வரவேற்புரை :

ஸ்ரீமத். சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
இராஜாங்கக்கட்டளை, கட்டளை விசாரணை, திருவாரூர்.

நடுவர் :

பேராசிரியர், திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ.
தமிழ்ப் பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

பொருள் :

கந்தபுராண வரலாற்றில் சூரபதுமன் குற்றவாளி !

வழக்குத் தொடுப்பவர் :
திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ.
தமிழ்ப் பேராசிரியர்,
தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

எதிர்வழக்கிடுவோர் :
திரு. அ. கலியபெருமாள் எம்.ஏ.
தமிழ் விரிவுரையாளர்,
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

---

27—5—75 செவ்வாய்க்கிழமை ] [ மாலை 6-30 மணி

ஏழாம் திருநாள்

ஸ்ரீ ஞானம்பிகை உடனுறை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி
திருக்கல்யாணத் திருநாள்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருமுன் :

வியாகரண சிரோமணி
பிர்மஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்
ஆசிரியர், தருமையாதீன வேத சிவாகம பாடசாலை
" திருக்கல்யாணத் தத்துவம் "

இரவு 8-00 மணி முதல்

பொம்மலாட்டம்
" பார்வதி திருமணம் "
ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினர், மாயூரம்.

---

28—5—75 புதன்கிழமை ] [ மாலை 6-30 மணி

எட்டாம் திருநாள்

பட்டிமண்டபம்

வரவேற்புரை :

தருமையாதீனப் புலவர்,
திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,
வித்துவான் திரு வி. சா. குருசாமி தேசிகர்
முதல்வர் ( பொறுப்பு )
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

நடுவர் :

சிலம்புச்செல்வர்,

திரு. ம. பொ. சிவஞானம்

தமிழ்நாடு மேலவைத் துணைத் தலைவர், சென்னை.

பொருள் :

மூவர் தேவார வரலாற்று அற்புதங்களின் அடிப்படை
ஆண்டவன் அருள் விளக்கமா?
அடியவர் பெருமை விளக்கமா?

| ஆண்டவன் அருள் விளக்கமே ! | அடியவர் பெருமை விளக்கமே ! |
|---|---|
| திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ., கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை. | திரு. அ. கலியபெருமாள் எம். ஏ., தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம். |
| புலவர். திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ., த. ஆ. பல்கலைக் கல்லூரி. | திரு. மெய்ப்பொருள் எம். ஏ., புஷ்பம் கல்லூரி, பூண்டி. |
| வித்துவான். புலவர், திரு. வே. கண்ணப்பன் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் பள்ளி, தருமபுரம். | புலவர். திரு. சோம. இளவரசு தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம். |

---

29—5—75 வியாழக்கிழமை ] [ மாலை 6-30 மணி

ஒன்பதாம் திருநாள்

கவியரங்கம்

வரவேற்புரை :

ஸ்ரீமத். பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை,

குமரக்கட்டளை, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்,

மாயூரம்.

பொருள் :

" சைவத்தின் மேற்சமயம் வேறில்லை "

கவியரங்கேறுவோர் :

பாவலர். திரு. ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பேராசிரியர், புலவர் கல்லூரி, கரந்தை.

" மூர்த்தி "

கவிஞர். திரு. தொல்காப்பியர் தஞ்சை.

"தலம்"

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர். அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

"தீர்த்தம்"

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ.,
தமிழ்ப் பேராசிரியர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

"தத்துவம்"

---

30—5—75 வெள்ளிக்கிழமை ] [ காலை 9-00 மணி

பத்தாம் திருநாள்

## குருபூசை விழா — கருத்தரங்கு

வரவேற்புரை :

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ.,
தமிழ்ப்பேராசிரியர்
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்.

மாண்புமிகு. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல்.
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

தவத்திரு. ஊரனடிகள்
வள்ளலார் குருகுலம், வடலூர்.

"சொக்கநாத வெண்பா"

தருமையாதீனப் புலவர்.
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்
முதல்வர் (பொறுப்பு) தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

"சிவபோகசாரம்"

தருமையாதீனப் புலவர்.
முதுபெரும்புலவர். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்
காஞ்சிபுரம்.

"ஞானப்பிரகாசமாலை"

தருமையாதீனப் புலவர்,
சிரோமணி. வித்துவான். திரு. வி. சபேசன்
தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

"சொக்கநாதக் கலித்துறை"

30—5—75 வெள்ளிக்கிழமை ] [ காலை

பத்தாம் திருநாள்

## குருபூசை விழா

காலை 9 மணி அளவில் :

### ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

குருபூசை விழா மலர் :

சித்தாந்த வினா – விடை

காலை 12 மணி அளவில் :

### ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

( ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயில் )

மாலை 6 மணி அளவில் :

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

காவிரித் திருமஞ்சனத்திற்கும்,

குருமூர்த்த வழிபாட்டிற்கும் எழுந்தருளல்.

இரவு 9 மணி அளவில் :

விரிவுரை :

செந்தமிழ்ச் செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம் ஏ.

ஆசிரியர், கலைமகள், சென்னை.

" குரு பக்தி "

### நாமாவளி பஜனை

தருமையாதினப் பண்ணிசைப்புலவர். கலைமாமணி,

சங்கீதபூஷணம், திரு. பீ. சுவாமிநாதன்

" குருபரம்பரை வரலாறு "

---

31—5—75 சனிக்கிழமை ] [ காலை 8 மணி

## பட்டணப்பிரவேசத் திருநாள்

### கருத்தரங்கம்

சிறப்புரை :

திரு. மீ. ப. சோமசுந்தரம்

தென்மண்டல வானொலி நிலைய நிகழ்ச்சி அமைப்பாளர், சென்னை.

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை பி. ஏ.,

திருச்சிராப்பள்ளி.

" குருவழிபாடு "

வித்துவான். திரு. தா. குருசாமி
மதுரை.
"இலிங்க வழிபாடு"

வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர்
திருவாரூர்.
"சங்கம வழிபாடு"

காலை 9-00 மணி அளவில்

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல் 1-00 மணி

மாகேசுவரபூஜை

---

31—5—75 சனிக்கிழமை ] [ மாலை 4 மணி முதல்

சமயப்பயிற்சி வகுப்பு நிறைவு விழா

பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்:

சிறப்புரை :

அறப்பணிச் செல்வர்
டாக்டர், திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை எம். பி. பி. எஸ்.
சிதம்பரம்.

விரிவுரை :

திரு. ஆர். இராஜசேகரன் பி. ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், மாயூரம்.
"குருஞானசம்பந்தர்"

திருமுறைக் கலாநிதி, பண்ணுராய்ச்சி வித்தகர்,
குடந்தை. திரு. ப. சுந்தரேசனுர்
"திருஞானசம்பந்தர்"

இன்னிசை :

இரவு 7 மணி முதல்

தருமையாதீன இசைப்புலவர்
சீகாழி, திரு. எஸ். கோவிந்தராசன் குழுவினர்.
சென்னை.

இரவு 10 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
பட்டணப்பிரவேசம